தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, DECEMBER 17, 2021
வெள்ளிக்கிழமை டிசெம்பர் 17, 2021 | ஒளி: 07 கதிர்: 181 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



# தலதாவுக்கு வந்த பெண்ணிடம் தோட்டா

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு வருகைதந்த பெண்ணொருவரின் கைப் பையிலிருந்து ரி.-56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் தோட்டா ஒன்று மீட்கப்பட்டுள்ளது. அதனையடுத்து அப்பெண் தலதா மாளிகை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2




# எதிர்வரும் வாரம் வழக்கு

இரண்டு எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் சட்டத்தை மீறி உற்பத்திகளை சந்தைக்கு விநியோகித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



# ஒமிக்ரான் தொற்று 5 ஆக அதிகரிப்பு

ஒமிக்ரான் மாறுபாட்டுடன் மேலும் நால்வர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் பிரிவின் தலைவர் கலாநிதி சந்திம ஜீவந்தர, நேற்று (16) தெரிவித்தார்.

இது தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் பதிவிட்டுள்ளளார்.

ஏற்கெனவே நைஜீரியாவில் இருந்து வந்த பெண்ணொருவருக்கு ஒமிக்ரான் தொற்றியிருந்த நிலையில், நாட்டில் ஒமிக்ரான் தொற்றுக்குள்ளானோரின் தொகை 5 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸைப் பெற்றுக் கொள்ளுமாறும் பொதுமக்களை அவர் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2



# சீனாவுக்கு ஒரு சதமேனும் கொடுக்கக் கூடாது

உரம் தொடர்பான பிரச்சினையில் என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும் எனத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இதற்காக ஒரு சதம் கூட கொடுக்கக் கூடாது. ஏனெனில் இது இந்நாட்டு மக்களின் பணம் என்றார்.

தொடர்ச்சி P2

### சட்டவிரோத கருத்தடை விவகாரம்

# வைத்தியர் ஷாபிக்கு சம்பளத்துடன் மீண்டும் பணி



சட்டவிரோத கருத்தடை அறுவை சிகிச்சை செய்த குற்றச்சாட்டின் பேரில் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் ஷாபி சிஹாப்தீனை மீண்டும் பணியில் அமர்த்துவதுடன் அவர் விடுமுறையில் இருந்த காலத்துக்கான சம்பள நிலுவையையும் வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2



### சீன உர நிறுவனத்துக்கான நிதியை

# மஹிந்தானந்தவும் ஷசீந்திரவும் செலுத்தட்டும்

## அநுர குமார திஸாநாயக்க தெரிவிப்பு

சீன உர நிறுவனத்துக்கான 6.7 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவை வரி செலுத்துவோரின் பணத்தில் இருந்து வழங்கப்படக் கூடாது எனத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, அதனை இரண்டு விவசாய அமைச்சர்களும் இரண்டு உர நிறுவனங்களின் தலைவர்களும் செலுத்த வேண்டும் என்று, நேற்று (16) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# ஜி.எல் பீரிஸை சந்தித்தார் கோபால் பாக்லே

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸை, வெளிநாட்டு அமைச்சில் வைத்து நேற்று (16) சந்தித்தார். இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடினார்.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பரஸ்பர ஒத்துழைப்பு சார்ந்த விட யங்கள் மற்றும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் அண்மைய இந்திய விஜயத்தின் விளைவுகள் தொடர்பான விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் உரையாடினர்.





### மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும்

# பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தான் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது எனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார, மக்களின் எதிர்பார்ப்புகளை அடையாளம் கண்டு,


தொடர்ச்சி P2

### புதிய சுகாதார வழிகாட்டல்கள் வெளியாகின

# திருமண வைபவங்களில் 50 சதவீதமானோருக்கு அனுமதி

புதிய சுகாதார வழிகாட்டுதல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன, நேற்று (16) வெளியிட்டார். நேற்று (16) அமலாக்கப்பட்டுள்ள இந்த வழிகாட்டுதல்கள், டிசெம்பர் 31 ஆம் திகதிவரை அமலில் இருக்கும்.

திருமண நிகழ்வுகளின் போது மண்டபத்தின் வழமையான கொள்ளளவில் அதிகபட்சமாக 50 சதவீதம் வரை மட்டுப்படுத்தப்பட்டு



உள்ளதுடன், மதுபானம் வழங்குவதற்கான தடையும் நீக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தொடர்ச்சி P2



### தேயிலைச் செய்கைக்கு தேவையான

# 63,000 தொன் இரசாயன உரங்களை வழங்க இணக்கம்

தேயிலை செய்கைக்குத் தேவையான 63,000 மெற்றிக் தொன் இரசாயன உரங்களை வழங்குவதற்கு உர இறக்குமதியாளர்கள், நேற்று (16) இணக்கம் தெரிவித்ததாக விவசாய அமைச்சு அறிவித்தது.

தொடர்ச்சி P2

# றிஷாட் கட்சி எம்.பிக்களுக்கு இருவார கால அவகாசம்



ரஸீன் ரஸ்மின்

பாராளுமன்ற உறுப்பினர் றிஷாட் பதியூதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எம்.பிக்கள் மூவருக்கும் விளக்கமளிப்பதற்கு மேலும் இருவார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.


2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பில் அரசாங்கத்துக்கு ஆதரவாக இம்மூவரும் வாக்களித்தனர்.

புத்தளத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேற்று (16) சந்தித்த றிஷாட் பதியூதீன்,

தொடர்ச்சி P2

### யாழ். மாணவனுக்கு

# பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் அழைப்பு



எஸ்.நிதர்ஷன், சண்முகம் தவசீலன், மு.தமிழ்ச்செல்வன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவனும் ஊடகவியலாளருமான பரராஜசிங்கம் சுஜீபன், பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரின் விசாரணைக்காக, இன்று (17) அழைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



### உப தவிசாளர் மீது தாக்குதல்

# மஸ்கெலியா உறுப்பினர்கள் இருவர் கைது

எஸ். சதீஸ்

மஸ்கெலியா பிரதேச சபையின் உபதவிசாளர், பெரியசாமி பிரதீபன் மீது தாக்குதல் மேற்கொண்ட இரண்டு உறுப்பினர்களைக் கைது செய்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

### யானைக் குட்டி வழக்கிலிருந்து

# நீதவான் திலின கமகே விடுதலை

சட்டவிரோதமான முறையில் யானைக் குட்டியை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் தொடரப்பட்ட வழக்கில் இருந்து, பணியிடைநீக்கம் செய்யப்பட்டிருந்த நீதவான் திலின கமகேவை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம், நேற்று (16) கட்டளை பிறப்பித்தது.

6.9 மில்லியன் ரூபாய் பெறுமதியான ‘சகுரா’ என்ற யானைக் குட்டியை சட்டவிரோதமாக வைத்திருந்த குற்றச்சாட்டின்



பேரில், முன்னாள் நீதவான் திலின கமகே உட்பட நான்கு குற்றவாளிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

தொடர்ச்சி P2

# ஐ.நா உதவி பொதுச் செயலாளர் தடுப்பூசி திட்டத்தை பாராட்டினார்

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் கன்னி விக்னராஜா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் (15) சந்தித்தார். குறித்த சந்திப்பின்போது, இலங்கையில் செயற்படுத்தப்படும் கொவிட் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்ப

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## எதிர்வரும் வாரம் வழக்கு

நுகர்வோர் விவகார அதிகார சபையின் சட்டப் பிரிவினால் இது தொடர்பிலான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் எதிர்வரும் வாரமளவில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் எரிவாயுவிற்கான தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்தது.

இதனிடையே, நாட்டு மக்களுக்கு பாதுகாப்பற்ற தன்மையை ஏற்படுத்திய எரிவாயு நிறுவனங்களுக்கு உரிய தண்டனை கிடைக்க வேண்டும் என சீனிகம தேவாலயத்தில் நேற்று (16) வழிபாடு முன்னெடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயற்பாட்டாளர்களால் இந்த வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மஹிந்தானந்தவும் ஷசீந்திரவும் செலுத்தட்டும்

பொது மக்கள் எந்தவொரு பரிவர்த்தனையிலும் ஈடுபடாததால், பொது நிதியில் இருந்து பணம் செலுத்துவதற்கு அரசாங்கத்துக்கு தார்மீக உரிமை இல்லை என்று, ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ, இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர் லிமிடெட் ஆகியவற்றின் தலைவர்களே பணம் செலுத்த வேண்டும் என அவர் கூறினார்.

கடன் கடிதத்தைத் திறப்பதற்கு முன்னர் மேற்படி உரத்தின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறிய அவர், கடன் கடிதங்களை யார் திறந்தனர் என்றும் அவ்வாறு செய்ய அறிவுறுத்தல்களை வழங்கியவர்கள் யார் என்பது குறித்தும் ஆராயப்பட வேண்டும் என்று கேள்வி எழுப்பினார்.

கடன் கடிதத்தைத் திறப்பது இறக்குமதி செயல்முறையின் இறுதிப் படியாகும், மேலும் துறைமுகத்துக்கு சரக்கு வந்தவுடன் வாங்குபவர் பணம் செலுத்த வேண்டும். கடன் கடிதங்களை திறப்பதற்கு முன் மாதிரிகள் சோதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றார்.

## 63,000 தொன் இரசாயன உரங்களை வழங்க இணக்கம்

அத்துடன், ஏற்கெனவே தங்களுடைய களஞ்சியசாலைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ள உரத்தை கமநல அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு விநியோகிக்க இறக்குமதியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் விவசாய இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்ட கலந்துரையாடலில் விவசாய அமைச்சில் நேற்று (16) இடம்பெற்ற போதே மேற்குறிப்பிட்ட விடயம் தெரியவந்தது.

பொது திறைசேரியில் தமக்கு வழங்கப்பட வேண்டிய பெருந்தொகையான பணத்தை பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் உரங்களை கோருவதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக உர இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நிதி அமைச்சுடன் கலந்துரையாடி இறக்குமதியாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையில் ஒரு பகுதியை ஜனவரி 05 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதாக அமைச்சர் அளுத்கமகே உறுதியளித்தார்.

உர இறக்குமதியாளர்கள் மற்றும் உள்ளூர் உர உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல் கவனம் செலுத்தப்பட்டது.

உர இறக்குமதியாளர்கள் மற்றும் உள்ளூர் உர உற்பத்தியாளர்கள், பெரும்போகத்துக்கு தேவையான உரங்களை தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்தது.

# ஒமிக்ரோன் தொற்று 5 ஆக அதிகரிப்பு

இந்த எண்ணிக்கை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

“எதிர்பார்த்தபடி ஒமிக்ரான் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும். ஆகையால், உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள் இன்றைய நிலைவரப்படி, தங்கள் ஆய்வகத்திலிருந்து நால்வருக்கு ஒமிக்ரான் தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது” என்றும் அவர் டுவீட் செய்துள்ளார்.

முன்னெப்போதும் இல்லாத அளவில் ஒமிக்ரான் உலகம் முழுவதும் பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனம் (WHO) எச்சரித்திருந்தது. 77 நாடுகளில் பெரிதும் மாற்றமடைந்த மாறுபாட்டின் வழக்குகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த தொற்று, இன்னும் பலரிடம் இருக்கலாமென உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், எச்சரித்திருந்தார். அத்துடன், மாறுபாட்டைச் சமாளிக்க போதுமான அளவு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென என்பது தொடர்பில் கவலைப்படுவதாகக் கூறினார்.

# ஐ.நா உதவி பொதுச் செயலாளர் தடுப்பூசி திட்டத்தை பாராட்டினார்

“இலங்கையில் மிகச்சிறந்த தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் காணப்படுகிறது” என விக்னராஜா குறிப்பிட்டார்.

பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ள பல நாடுகளுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளதாக, இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை தற்போது மீண்டும் படிப்படியாக வளர்ச்சியடைய ஆரம்பித்திருப்பதாக பிரதமர் இதன்போது குறிப்பிட்டார்.

கொவிட் தொற்று நிலைமை காரணமாக உலகளாவிய ரீதியில் சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தடுப்பூசி ஏற்றல் செயற்பாடுகளின் ஊடாக சுற்றுலாப் பயணிகளின் வருகை மீண்டும் அதிகரிக்குமென தான் எதிர்பார்ப்பதாக விக்னராஜா நம்பிக்கை வெளியிட்டார் என பிரதமர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்று நிலைமைக்கு பின்னரான பொருளாதார நிலை குறித்து கலந்துரையாடிய திருமதி.விக்னராஜா , இலங்கைக்கு உதவுவதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு பல வழிகள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய நாடுகள் சபையுடன் மிக நெருக்கமாக பணியாற்றியுள்ளதாக சுட்டிக்காட்டிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அது எதிர்காலத்திலும் தொடருமென தெரிவித்தார்.

குறிப்பாக தனியார் துறையில் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதன் அவசியம் மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்பிற்கு இளைஞர் யுவதிகளை ஊக்குவிப்பதன் அவசியம் என்பன குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது

அவர்களை பாதுகாப்பதுடன் அவர்களின் வாழ்வாதார நிலையை உயர்த்தும் பொறுப்பு அரசாங்கத்திடம் உள்ளது என்றும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தரமில்லாத அரசாங்கம் வீட்டுக்குச் செல்வதற்கான காலம் சரியென்றும் அரசாங்கத்துக்கு முடியாதெனின், அவர்களிடம் நாட்டை ஒப்படைத்து விட்டு வீட்டுக்குச் செல்லுமாறும் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்த்தாக குறிப்பிட்ட அவர், சஜித் மற்றும் ரணிலின் ஆட்சி தான் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இருந்தது என்பதை அவர் மறந்துவிட்டார் என குறிப்பிட்டார்.

அவர்களது ஆட்சியில் இந்த நாட்டு மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்கியிருந்தால் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை கண்டிருந்தால் இன்று ரணில் விக்கிரமசிங்க எதிர்கட்சியில் தனியான ஆசனத்தில் அமர்ந்திருக்கும் நிலை வந்திருக்காது எனவும் சுட்டிக்காட்டினார்.

ரணில் இன்று பொருளாதார வல்லுநர் போல் கருத்துகளை முன்வைத்து, பாராளுமன்றத்தில் பெரிய ஆளாக காட்ட முயல்கிறார் என தெரிவித்த ஜகத் குமார, அவர் மக்கள் ஆணையைப் பெற்று சரியாக தனத வேலைகளைச் செய்திருந்தால் சஜித் பிரேமதாச, பாராளுமன்றத்தில் இன்று சிறிய குழுவினருக்கு தலைவராக இருக்கும் அவசியம் ஏற்பட்டிருக்காது என்றார். --

## திருமண வைபவங்களில் 50 சதவீதமானோருக்கு அனுமதி

எந்த நேரத்திலும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படும் மொத்த நபர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அறிவுறுத்தல்களுக்கு இணங்காத நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராக தற்போதுள்ள சட்ட விதிகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உணவகங்களில் உணவருந்துவோர், கடைகள், அங்காடிகள், மருந்தகங்கள், மளிகைக் கடைகள் ஆகியவற்றில் அவற்றின் கொள்ளளவில் 50 சதவீதமானோர் அனுமதிக்கப்படுவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரையரங்குகள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் அதன் கொள்ளளவில் 75 சதவீதம் பேர் அனுமதிக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2021 டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் நிலைமை மீளாய்வு செய்யப்பட்டு அதன் பின்னர் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் என பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரிஷாட் கட்சி எம்.பிக்களுக்கு...

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க வேண்டுமென கட்சியின் உயர்பீடம் கூடி முடிவெடுத்திருந்தது. எனினும், எமது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான இஷாக் ரஹ்மான், முஷாரப், அலிசப்ரி ரஹீம் ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர்.

இவ்வாறு கட்சியின் உயர்பீடத் தீர்மானமானத்து எதிராக வாக்களித்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், விளக்கமளிப்பதற்கு அம்மூவருக்கும் கால அவகாசமும் வழங்கப்பட்டது என்றார். எனினும், விளக்கமளிப்பதற்கு தமக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் போதாதமையால் மேலும் கால அவகாசம் வழங்குமாறும் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களும் எழுத்து மூலம் கேட்டிருந்தனர்.

## நீதவான் திலன கமகே விடுதலை

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 200ஆவது பிரிவின்படி, குற்றம் சாட்டப்பட்டவர்களை சாட்சிகளை அழைக்காமல் விடுவிக்குமாறும், பிரதிவாதிகள் தரப்பு கோரிக்கை விடுத்திருந்தது.

குற்றம் சாட்டப்பட்ட நீதவானை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்ட மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த, குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களை நிறுவுவதற்கு வழக்குத் தொடுநர் தரப்பு தவறியுள்ளதாகவும் அறிவித்தார்.

அனுமதிப்பத்திரம் இன்றி யானைக் குட்டியை வைத்திருந்தமை, போலி ஆவணம் தயாரித்து சம்பந்தப்பட்ட யானைக் குட்டியை பதிவு செய்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் நீதவான் திலின கமகேக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

## தலதாவுக்கு வந்த பெண்ணிடம் தோட்டா

அந்தப் பெண், தலதா மாளிகைக்கு பிரதான நுழைவாயிலின் ஊடாக செல்வதற்கு நேற்று (16) முயற்சித்துள்ளார். எனினும், அங்கிருந்த ஸ்கேன் கருவி அபாய ஒலியை எழுப்பியுள்ளது.

அதன்பின்னர், அந்த பெண்ணின் கைப்பை சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதிலிருந்து தோட்டா கைப்பற்றப்பட்டுள்ளது.

அப்பெண்ணின் கணவன், பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றியுள்ளார். அவர், இன்றைக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் மரணித்துவிட்டார் என, பொலிஸாரிடம் வாக்குமூலமளித்துள்ளார்.

வத்தேகமவில் வசித்துவந்த அந்தப் பெண், தன்னுடைய கணவன் இறந்ததன் பின்னர் காலி பிரதேசத்துக்குச் சென்று குடியேறியுள்ளார் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதெனத் தெரிவித்த பொலிஸார், அப்பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறினர்.

## சீனாவுக்கு ஒரு சதமேனும் கொடுக்கக் கூடாது

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரி, இன்று நாட்டில் உணவுப் பொருள்களுக்கு தட்டுபாடு, நிதிப் பிரச்சினை, பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் சீனாவின் உரக்கப்பலுக்கு ஒரு சதமேனும் கொடுக்கப்பட்டால் அதற்கு நாங்கள் கடுமையாக எதிர்ப்பை தெரிவிக்கின்றோம்.

அத்துடன், இந்த உரக் கப்பலை கொண்டு வந்தவர்கள் யார் என கேள்வி எழுப்பிய அவர், இந்த உரம் தொடர்பில் அமைச்சர்கேளோ அல்லது விடயதானத்துக்கு பொறுப்பானவர்களோ தான் சீனாவுக்கு சென்று இந்த உரம் தொடர்பில் ஆராய்ந்து இலங்கைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்திருப்பார்கள். அவர்கள் தொடர்பில் தற்போது எவ்விதத் தகவலும் இல்லை. எனவே அவர்களை கண்டுபிடித்து தண்டனை வழங்க வேண்டும் என தெரிவித்த அவர், மறுபுறம் சீனாவுக்கு ஒரு சதமேனும் கொடுக்க முன்வர கூடாது. இந்த தவறை செய்தவர்களிடம் இதற்கான நிதியை அறவிட வேண்டும்.

சமையல் எரிவாயு வெடிப்புகள் பதிவாகின்றன. இது ஆரம்பத்தில் ஒன்றிரண்டு வெடிக்கும் போதே, லிட்ரோ நிறுவனத்தின் பணிப்பாளர் சபை பதவி விலகியிருக்க வேண்டும். இல்லையேல் அரசாங்கம் பதவி நீக்கியிருக்க வேண்டும். எரிவாயுவின் சமநிலையை மாற்றிய தொழில்நுட்ப அதிகாரியை பதவி நீக்கம் செய்து அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. லிட்ரோ நிறுவனத்தின் பணிப்பாளர் சபை முதல் அதிகாரிகள் வரை அனைவரும் சுதந்திரமாக இருக்கின்றனர்.

இதேவேளை, சமையல் எரிவாயு பிரச்சினை நல்லாட்சியிலும் இருந்ததாக ஆளுங்கட்சி தெரிவிப்பதாக எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மைத்திரிபால சிறிசேன, ஆம் இப்போது அனைத்து பிரச்சினைகளுக்கும் நல்லாட்சியே காரணம் என அரசாங்கம் தெரிவிக்கின்றது. 2015ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் நடத்தப்பட்ட ஆட்சியில் செய்த புதுமையான விடயங்களை செய்வதாகக் கூறி தானே இவர்கள் ஆட்சிக்கு வந்தனர். எது நடந்தாலும் எமது ஆட்சியை குற்றம் சொல்கின்றனர். ஆனால் எமத ஆட்சியில் ஒரு அடுப்பு கூட வெடிக்கவில்லை என்றார்.

## வைத்தியர் ஷாபிக்கு சம்பளத்துடன் மீண்டும் பணி

சுகாதார அமைச்சால், நேற்று (16) வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை ஒன்றிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக, டொக்டர் ஷாபிக்கு நிலுவைத் தொகையை செலுத்தும் முன்னேற்றம் குறித்து புதுப்பிக்கப்பட வேண்டும் என்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் எஸ்.எச்.முனசிங்க கோரியுள்ளார்.

குருநாகல் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றியபோது, பெண்களின் அனுமதியின்றி கருத்தடை செய்யப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் சிஹாப்தீன் கைது செய்யப்பட்டு, குருநாகல் பிரதான நீதவானால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

டொக்டர் மொஹமட் ஷாபி, தாய்மார்களின் கருமுட்டைக் குழாய்களை அடைத்ததாகவோ, சட்டவிரோதமான முறையில் சொத்துக் குவித்ததாகவோ அல்லது பயங்கரவாத அமைப்புடன் தொடர்புகளைப் பேணியதாகவோ இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் நிரூபிக்கப்படவில்லை என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் 2019 ஜூலை மாதம் குருநாகல் நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் அழைப்பு

“கிளிநொச்சியை சேர்ந்த இளம் ஊடகவியலாளர் ஒருவர், தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்ய, பேஸ்புக் ஊடாக முனைகிறார்” என, தேரர் ஒருவர் ஊடக சந்திப்பொன்றில் கூறியிருந்தார்.

தேரர் நடத்திய ஊடக சந்திப்பு குறித்தும் புலம்பெயர் நாட்டைச் சேர்ந்த நபருக்கு எதிராக செய்தி வெளியிட்டதன் விளைவாகவுமே குறித்த தேரர் ஊடக சந்திப்பை நடத்தினார் எனக் குற்றஞ்சாட்டியும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவனும் ஊடகவியலாளருமான ப.சுஜீபன், ஜூன் 29ஆம் திகதியன்று, யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணையகத்துக்கு விரிவான கடிதமொன்றை வழங்கியிருந்தார்.

இந்நிலையில், டிசெம்பர் 13ஆம் திகதியன்று, கிளிநொச்சி மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினர், இலக்கம்- QG 6961 என்னும் ஓட்டோவில் வந்து, குறித்த ஊடகவியலாளரின் வீட்டுக்குச் சென்று, கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு விசாரணைக்கு வருமாறு, அழைப்பாணை கையளித்துவிட்டு சென்றுள்ளனர்.

# மஸ்கெலியா உறுப்பினர்கள் இருவர் கைது

நேற்று முன்தினம் (15) இரவு இந்த கைது செய்யப்பட்டு உள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா பிரதேச சபையின் உபதவிசாளர், பெரியசாமி பிரதிபனை கடந்த 13ஆம் திகதியன்று இடம்பெற்ற சபை அமர்வின் போது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவரும் இலங்கை தொழிலாளர் காங்ரஸின் உறுப்பினர் ஒருவரும் தாக்கியதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் பி. அனந்தராஜ், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் எஸ்.ஏ.திஷாநாயக்க ஆகிய இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ள நிலையில், தாக்குதலால் காயமடைந்த உப தவிசாளர் மஸ்கெலியா வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகின்றார்.

# “சீன முதலீட்டு முயற்சிகளை வரவேற்கிறேன்”

மக்களுக்கு வளமான எதிர்காலத்தைப் பெற்றுத் தரக்கூடிய முதலீடுகளையும் தொழில் நுட்பங்களையும் வரவேற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் சீன முதலீட்டு முயற்சிகளை வரவேற்பதாக, கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

வடமாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கீ சென் ஹொங், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை - சீன கூட்டு முயற்சியான குயிலான் நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வருகின்ற கடலட்டை குஞ்சு இனப் பெருக்கப் பண்ணையில் இச்சந்திப்பு நடைபெற்றது.

கடலட்டை பண்ணை முதலீட்டின் ஊடாக ஐந்து மடங்கு இலாபத்தினை பெற்றுக் கொள்ள முடியும் என்பது ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த முதலீட்டின் மூலம் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது தெரிவித்தார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஊடாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சுமார் 13.75 மில்லியன் ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகளையும் 6 மில்லியன் ரூபாய் பெறுமதியான வலைகளையும் வழங்கி வைத்துள்ளார்.



# ஒப்பந்தத்தை இரத்து செய்க



மக்களுக்கான அரசாங்கமாக இருந்தால் யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் அமெரிக்க நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டும் என ஐக்கிய கூட்டு தொழிற்சங்க சக்தியின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டுக்குப் பெரும் இலாபத்தை ஈட்டித்தரும் யுகதனவி மின்உற்பத்தி நிலையத்தை நள்ளிரவு 12 மணிக்கு அமெரிக்காவுக்கு திருட்டுத்தனமாக விற்பனை செய்துள்ளனர். 4 மடங்கு தரகுப் பணத்தைப் பெறுவதற்காகவே இதனை விற்பனை செய்துள்ளனர் எனவும் கூறினார்.

இதேவேளை, யுகதன மின் உற்பத்தி நிலையம் இன்னும் 10 வருடங்களில் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமாக இருந்த நிலையில் இதனை விற்பனை செய்துள்ளனர்.

இந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. இந்த ஒப்பந்தத்தால் மின் உற்பத்தித் துறையில் அடிமையைபோல இருக்க வேண்டிய நிலைமை இலங்கைக்கு ஏற்படும். நைஜிரியாவுக்கும் இதுவே நடந்தது என்றார்.

எனவே இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தப் போவதில்லை. அரசாங்கம் அறிவித்து, சட்டமா அதிபர் ஊடாகவேனும் ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் அவர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

# அப்படியும் இப்படியும் யுகதனவியை எதிர்க்கிறோம்



யுகதனவி ஒப்பந்தம் தொடர்பில் அமெரிக்க நிறுவனம் ஒன்றுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு மக்கள் விடுதலை முன்னணியானது அரசியல், கொள்கை ரீதியாக எதிரானது என அக்கட்சியின் அரசியல்பீட உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

எனினும் சிலர் யுகதனவி ஒப்பந்தத்தை கொள்கை ரீதியாக எதிர்க்காமல் அரசியலுக்காக தாங்கள் எதிர்ப்பதுபோல காட்டிக்கொள்கிறார்கள். மக்கள் பக்கமாகத் தாம் இருப்பதாகக் காட்டிக்கொள்வதற்கு மக்களை ஏமாற்றுவதற்கே அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்.

யுகதனவி ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதில் அரசியல் இலாபம் இருக்கக்கூடும். நாட்டின் ஏனைய சொத்துகளை விற்பனை செய்யும்போது கையுயர்த்திவிட்டு, இதனை மாத்திரம் எதிர்க்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.



# ஐ.நா உதவிப் பொதுச்செயலாளர் சபாநாயகரை சந்தித்தார்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை, ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பொதுச்செயலாளரும் ஆசிய, பசுபிக் பிராந்தியப் பணியகத்தின் பணிப்பாளருமான கன்னி விக்னராஜா நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்ற இச்சந்திப்பில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரொபர்ட் ஜுகாமும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவும் கலந்துகொண்டிருந்தனர்.

# நாடு பற்றி எரிகிறது பசிலோ சுகபோகம்



நாடு பற்றி எரியும் நிலைமையிலும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அமெரிக்காவுக்கு சென்றுள்ளார், நாடு பற்றி எரிந்தாலும் அது தொடர்பில் கவலைப்படாது, தங்களது சுகபோக வாழ்க்கைகளை அனுபவிக்கிறார்கள் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், இலங்கையின் வலுசக்திக்கு யுகதனவி மின் உற்பத்தி நிலையம் மிகவும் முக்கியமானது. இதனை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு அமெரிக்கப் பிரஜையான பசில் ராஜபக்ஷ வழங்கியுள்ளார் என்றார்.

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எந்தவொரு நபரும் முயற்சிக்கவில்லை. இவ்வாறான நிலையிலேயே நான் அண்மையில் பாராளுமன்றில் அந்த ஒப்பந்தத்தை சமர்ப்பித்திருந்தேன் என்றார்.

எனவே இது தொடர்பில் அரசாங்கம் பதிலளித்தே ஆகவேண்டும். யுகதனவியை விற்பனை செய்யவில்லை. அதில் முதலீடு செய்வதற்கே வழங்கியுள்ளோம் என அரசாங்கம் கூறினாலும், அந்த மின்நிலையத்தின் 40 சதவீதமான பங்குகள் அமெரிக்காவுக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும் கூறினார்.

யுகதனவி ஒப்பந்தத்தை அரசாங்கம் ஏன் ஒழித்து வைத்திருந்தது என்பது இன்று எல்லோருக்கும் தெரிந்துள்ளது. விற்பனை செய்த நாட்டின் சொத்துகளை திரும்பப் பெறப்போவதாகவும், நாட்டின் சொத்துகளை பாதுகாப்பதாகவும் கூறிகொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள், நாட்டின் சொத்துகளை திருட்டுத்தனமாக விற்பனை செய்து வருவது அம்பலமாகியுள்ளது என்றார்.



## சந்திப்பு...

கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சந்திரிகா விஜயரட்னவை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பால்கே சந்தித்தார். விவசாயம், தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, சுகாதாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி ஆகிய துறைகளில் கல்விசார் உறவை மேலும் வலுவாக்கல் குறித்த பயனுள்ள கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

# வீடற்ற யுகத்துக்கு விரைவில் முற்றுப்புள்ளி



வீடற்ற நிலையில் தாய் நாட்டில் விடுதியில் வாழ்வது போன்ற யுகத்தை எதிர்வரும் ஆண்டுகளில் முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினருக்காக நிர்மாணிக்கப்பட்ட 528 வீடுகளை கொண்ட கொலொம்தொட சரசவி உயன தொடர் மாடிக் குடியிருப்பை நேற்றுமுன்தினம் (15) திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வீடற்ற மக்களுக்கு அவர்களின் தாயகத்தின் உண்மையான உரிமைகளை வழங்குவதே எமது நோக்கமாகும். நாங்கள் அமல்படுத்தும் வீட்டுத் திட்டங்களில் சிங்களவர், தமிழ், முஸ்லிம் என்ற இனப் பாகுபாடு கிடையாது. மேலும், கட்சி பிளவும் இல்லை.

வீடற்றவர்கள் தன் சொந்த ஊரில் விடுதியில் குடியிருப்பவனைப் போன்றவர்கள் என்பதை நினைவில் வையுங்கள். இன்னும் சில வருடங்களில் அந்த சகாப்தம் முடிவுக்கு வர வேண்டும்.ஒரு கொள்கையுடன் நாம் இந்த வீட்டுத்திட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இது அரசியல் உள்நோக்கம் கொண்ட திட்டம் அல்ல.

கடந்த காலங்களில் வீடுகளை கட்டுவதை விட வீடுகளை கட்டுகிறோம் என்று கூறுவதற்கு பணத்தை செலவு செய்த அரசாங்கங்கள் இருந்தன. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் வீட்டுத் திட்டங்களுக்கான விளம்பரச் செலவு கோடிக்கணக்கான ரூபாயாகும். அந்தப் பணத்தில் இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான வீடுகளை கட்டியிருக்கலாம்.

நம் நாடு குறித்து எண்ணியே நாம் வீடுகளை கட்டுகிறோம். வீட்டுத்திட்டத்தை மக்கள் சார்பான திட்டமாக செயல்படுத்தி வருகிறோம்.மேலும் நாம் கொடுக்கும் வீட்டில் குடும்பமாக வாழ்வதற்கு ஏற்ற சூழல் அமைய வேண்டும். அந்த வீட்டில் சுதந்திரமாக வாழ வேண்டும்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கு அமைய, ஒவ்வொரு குடும்பத்திற்கும் வசதியான வீட்டை வழங்குவதை அரசாங்கம் நோக்கமாக கொண்டுள்ளது. இதன் கீழ் நகர்ப்புற, கிராமப்புற, தோட்ட மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்காக வீடுகள் நிர்மாணிக்கப்படும். நாடு முழுவதும் இந்த வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளோம்.

அரசியல் நோக்கத்திற்காக அன்றி, நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்தித்தே நாம் இந்த வீட்டுத்திட்டத்தை செயல்படுத்துகிறோம் என பிரதமர் குறிப்பிட்டார்.

# மிக் விமான ஊழல் போல யுகதனவியிலும் ஊழல்



மிக் விமானக் கொள்வனவில் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகளையே, யுகதனவி மின் உற்பத்தி நிலையத்திலும் அரசாங்கம் செய்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், மிக் விமானங்கள் கொள்வனவு தொடர்பில் உக்ரைனுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. எனினும் உக்ரைனுடன் செய்து கொள்ளப்பட வேண்டிய ஒப்பந்தமான பிரத்தானியாவில் உள்ள வேறொரு நிறுவனத்திடம் செய்துகொள்ளப்பட்டது.

இதனை வெளிப்படுத்தியமைக்காகவே ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க சுட்டுக்கொள்ளப்பட்டார். மிக் விமான ஊழலைபோல யுகதனவியையும் செய்யப் பார்க்கிறார்கள். யுகதனவி தொடர்பில் போட்டர்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமாக இருந்தால், ஏன் மற்றொரு மூன்றாந்தரப்பு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள்? எனவும் கேள்வி எழுப்பினார்.

# காஸ் நிறுவன தலைவர்கள் மக்களுக்கு பதிலளிக்க வேண்டும்



காஸ் பிரச்சினை தொடர்பில் நிறுவன தலைவர்களும் அதிகாரிகளும் மக்களுக்கு உடனடியாக பதில் வழங்க வேண்டுமென நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

கொழும்பு- ஹொரன வீதியில் 9/2 இலக்க வெரஹர பாலம் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று (16) கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், காஸ் பிரச்சினை தொடர்பில் காஸ் நிறுவன தலைவர்களும் அதிகாரிகளும் மக்களுக்கு உடனடியாக பதில் வழங்க வேண்டும். தலைவர்களை தொலைபேசியூடாக கூடதொடர்பு கொள்ள முடியாதிருப்பதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன். மறைந்திருக்க வேண்டிய தேவை கிடையாது. அரசாங்கத்தை அபகீர்த்திக்குட்படுத்தாமல் மக்களுக்கு பதில் வழங்க வேண்டும் என்றார்.

மேலும், காஸ் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும். ஒரு கம்பனி தலைவர் ஊழல் மோசடி பற்றி பேசுவதை கண்டேன். ஆனால் கேஸ் பிரச்சினை வரும் போது தலைமறைவாகிறார். மறைந்திருப்பதற்காக ஜனாதிபதி அவருக்கு பதவி வழங்கவில்லை. பிரச்சினைகள் இல்லாத போது கருத்துக் கூறுவதை விடுத்து அரசாங்கத்தை அபகீர்த்திக்குள்ளாக்காமல் பிரச்சினைகளை மட்டுப்படுத்துவதற்கான தீர்வுகளை வழங்க வேண்டும் என்றார்.

## கொழும்பு பல்கலைக்கழகத்தின்
# பட்டமளிப்பு விழா நிகழ்வுகள்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17, 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பீடங்கள், கல்வி நிறுவனங்கள், கல்லூரிகள், வளாகங்களில் இருந்து சுமார் 2,668 பட்டதாரிகள் பட்டம் பெறுகின்றனர்.

பல்கலைக்கழக வேந்தர், சாசன கீர்த்தி சிறி புத்த சாசன ஷோபன வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த நாயக்க தேரர், உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சந்திரிகா என். விஜயரத்ன, மண்டப தலைவர், பீடாதிபதிகள், பணிப்பாளர்கள், நூலகர், கல்விசார் பணியாளர்கள்,பதிவாளர் மற்றும் நிதிநிர்வாகி (பேர்ஸர்) ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மூன்று தினங்களில் பதினோர் அமர்வுகளாக சம்பிரதாயபூர்வ பட்டமளிப்பு நிகழ்வு நடைபெறும்.

டிசெம்பர் 17 ஆம் திகதி, கலை பீடம், கல்வி பீடம், மனித வள மேம்பாட்டு நிறுவனம், மருத்துவ பீடம் ஆகியவற்றின் அமர்வுகள் நடைபெறும். டிசெம்பர் 18 ஆம் திகதி, கணினி கற்கைகள் நிறுவனம், முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தின் பட்டமளிப்பு அமர்வுகளும் டிசெம்பர் 19 ஆம் திகதி, சட்ட பீடம், சுதேச மருத்துவ நிறுவனம், விவசாய தொழில்நுட்பம், கிராமிய விஞ்ஞான நிறுவனம், சிறிபாளி வளாகம், விஞ்ஞான பீடம் ஆகியவற்றின் பட்டமளிப்பு அமர்வுகளும் நடைபெறவுள்ளன.

பட்டமளிப்பு உரைகளை கலாநிதி குலதுங்க ராஜபக்ஷ, பேராசிரியர் துசித அபேதுங்க, பேராசிரியர் சரோஜ் ஜயசிங்க, பீட்டர் டி அல்மேதா, ரணில் விதாரண, வணக்கத்திற்குரிய தபோவனயே சுதாதர தேரர், மஜூல டி சில்வா, கலாநிதி சரத் காமினி டி சில்வா, கலாநிதி ரொஹான் பெர்னாண்டோ, கலாநிதி டப்ளிவ். எம். டப்ளிவ். வீரகோன், அருட்தந்தை நொயல் டயஸ் அவ்வவ் அமர்வுகளில் உரைநிகழ்த்துவர்.

இந்த ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகம் தனது கலை, விஞ்ஞான பீடங்களினதும், பிரதான நூலகத்தினதும் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடியமை விஷேட அம்சமாகும்.

யாழ். மக்களுக்குத் தொடர்ந்து

# சீனா உதவும்

■ என்.ராஜ், எம்.றொசாந்த், எஸ். நிதர்ஷன்






யாழ்ப்பாண மக்களுக்கு, சீன அரசாங்கம் தொடர்ந்து உதவிகளை வழங்கும் என, இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்தார்.

யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன சமாசத்தில், நேற்று (16) நடைபெற்ற யாழ்ப்பாண மீனவர்களுக்கு, சுமார் 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான வலைகள், உலருணவுப் பொதிகளை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் நீண்ட காலமாக நல்லுறவு நிலவி வருகிறது. அதன் ஓர் அங்கமாகவே, சீன தூதரகமானது யாழ்ப்பாண மக்களுக்கு மீன்பிடி வலை, உலருணவுப் பொதிகளை வழங்குகின்றது.

இந்த உதவி வழங்கும் நிகழ்வை, ஓர் ஆரம்ப நிகழ்வாகவே நாங்கள் கருதுகின்றோம். இன்று ஆரம்பமான இந்நிகழ்வானது, சீனாவுக்கும் வடக்கு மக்களுக்கும் இடையே நல்லுறவை மேம்படுத்தும் என நாங்கள் கருதுகின்றோம்.

குறிப்பாக, சீனத் தூதரகமானது இலங்கைக்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றது. குறிப்பாக, கடந்த இரண்டு வருடங்களாக, கொரோனா வைரஸ் தாக்கத்தின் போது, இலங்கைக்கு சீனா பெருமளவில் உதவிகளை வழங்கியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

வடக்கு - கிழக்கில் உள்ள மக்களுக்கான தடுப்பூசியை பெற்றுக்கொடுப்பதில் சீனா பெரும்பங்காற்றியுள்ளது எனவும், அவர் கூறினார்.

"இதேவேளை, புதன்கிழமை (15), வடக்கு மாகாண ஆளுநரிடம், மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டத்துக்குமென ஐந்து நீர் சுத்திகரிக்கும் இயந்திரப்பொறிகளையும் ஐந்து மடிக்கணினிகளையும் கையளித்ததுடன், ஒரு தொகுதி புத்தகத்தையும் பொது நூலகத்துக்கு வழங்கியுள்ளோம். இவை அனைத்தையும் ஓர் ஆரம்பமாகவே கருதுகின்றோம். எதிர்காலத்தில் சீனத் தூதரகம் யாழ்ப்பாணத்துக்கு தொடர்ச்சியான உதவிகளை வழங்கும். கொரோனா காலத்தில், இந்தச் சிறிய உதவி வழங்கப்படுவதை ஓர் ஆரம்பப் புள்ளியாகவே பார்க்கின்றோம். எதிர்காலத்தில் உதவித்திட்டங்கள் வழங்க முடியும்" எனவும், சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தூதுவர் தெரிவித்தார்.

நிரூபிக்க வேண்டுமென்ற தேவை முஸ்லிம்களுக்கு

# கிடையாது

■ எம். எஸ். எம்.நூர்தீன்



"மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு காணிப் பிரச்சினை இருக்கின்றது" என்பதை ஹாபீஸ் நஸீர் அஹமட், சாணக்கியன் ஆகிய இருவரும் விவாதமொன்றுக்குச் சென்று தான் நிரூபிக்க வேண்டும், என்ற எவ்விதத் தேவையும் முஸ்லிம்களுக்குக் கிடையாது" என காத்தான்குடி நகர சபையின் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி உறுப்பினர் அஷ்ஷெய்க் ஏ.எல். ஏம்.சபீல் நழீமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "இது தேசியத்திலும் சர்வதேசத்திலும் அறியப்பட்ட விடயம். இவ்வாறான விவாதம் இம்மாவட்டத்தில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் தேவையில்லாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும். காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்களின் சிபாரிசுகளை அமுல்படுத்தினால் போதும்" என்றார்.

கொக்கட்டிச்சோலையில்

## 250 கிலோ கிராம் உரம் கொள்ளை



■ கனகராசா சரவணன்

கொக்கட்டிச்சோலை விவசாய திணைக்கள காரியாலயத்தின் களஞ்சிய அறையில் இருந்த சுமார் 250 கிலோ கிராம் நிறையுள்ள 5 உரப்பைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் கடந்த 14 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த சிலரே இவ்வாறு களஞ்சியசாலையின் பூட்டு உடைத்து அங்கிருந்த உரத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிரபல வர்த்தகர் ஒருவர், ஆயித்தியமலை, குறிஞ்சாமுனை வயல்பகுதி வாடி ஒன்றில் சுமார் 50 மூடை உரத்தை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த நிலையில், அங்கு சென்ற கொள்ளையர்கள் காவலாளியின் கைகளைக் கட்டிவிட்டு அங்கிருந்த உரத்தை கொள்ளையிட்டு சென்றுள்ள சம்பவமும் இடம் பெற்றுள்ளது.



திருகோணமலை

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட மனித உரிமைகள் கற்கைநெறி டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, திருகோணமலை, ஜேக்கப் பார்க் ஹோட்டலில் நேற்று முன்தினம் (15) நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் பிரதம அதிதியாக கலந்து கொண்டு, ஆறு மாத கால கற்கை நெறியை நிறைவு செய்த 31 நபர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வின் போது பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான மகஜர் ஒன்றும் திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் தலைவி சட்டத்தரணி உதயகுமார் பிரசாந்தினியால் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ஜெ.ஜனார்த்தனன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



கிளிநொச்சியில் விபத்து:

## 7 வயது சிறுவன் படுகாயம்

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, ஏ-9 வீதி, 155ஆம் கட்டைப் பகுதியில், நேற்று முன்தினம் (15) மாலை 5 மணியளவில் இடம்பெற்ற விபத்தில், 7 வயது சிறுவன் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

படுகாயங்களுக்குள்ளான சிறுவன், ஆபத்தான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்குச் சென்ற குறித்த சிறுவன், வகுப்பு முடிந்ததும், ஏ-9 வீதியின் மறுபுறத்தில் தன்னை அழைத்து வருவதற்காக காத்திருந்த தாயிடம் செல்வதற்காக வீதியை கடக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது, ஆடைத்தொழிற்சாலை ஒன்றின் வாகனம், அச்சிறுவனை மோதியுள்ளதாக, விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.





## நல்லூரில்...

இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான தூதரக அதிகாரிகள் குழு, புதன்கிழமை (15) யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள நிலையில், அன்றைய தினம் காலை 10 மணியளவில், நல்லூர் கோவிலுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டது.

சீனத் தூதுவரின் வருகையையொட்டி, நல்லூர் கோவில் சூழலின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்ததுடன், கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரமாக காணப்பட்டன. (படப்பிடிப்பு: எம். றொசாந்த், எஸ். நிதர்ஷன்)



## படகுப்பாலம் விபத்து: மூவருக்கும் பிணை

■ ஏ.எம் கீத்

கிண்ணியா படகுப்பாலம் விபத்தில் கைது செய்யப்பட்ட படகின் உரிமையாளர், ஓட்டுநர்கள் இருவர் அடங்கலாக மூவருக்கு இன்றையதினம் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இவர்களை ஐந்து இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்தப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இதைவேளை, குறித்த சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நவாலியில்

## வீட்டின் மீது தாக்குதல்

■ செந்தூரன் பிரதீபன்

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலி பகுதியில், நேற்று முன்தினம் (15) இரவு 9 மணியளவில், இனந்தெரியாத நபர்களால் வீடொன்றின் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டு உள்ளது.

மருதடி வீதி, நவாலி பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள், அந்த வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்து சேதம் விளைவித்ததுடன், வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுக்கும் தீ மூட்டியுள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை, மானிப்பாய் குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கல்முனை

## ஹென்றி மகேந்திரன் மீதான வழக்கில் திருப்பம்?

■ வி.ரி.சகாதேவராஜா



கல்முனை மாநகரில் அமைக்கப்பட்டிருந்த வீதி பெயர்ப் பலகையொன்றினை உடைத்ததாக த.தே. கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் மீது தொடரப்பட்ட வழக்கில் திருப்பம் ஏற்படலாமென தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆறு வருடங்களாக இவ்வழக்கு விசாரணை கல்முனை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றுவருகிறது.

இவ்வழக்கின் 34ஆவது தவணை கடந்த 15 ஆம் திகதி கல்முனை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.சம்சுதீன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அச்சமயம் கல்முனை மாநகர சபையின் கணக்காளர் ஏ. எச்.தஸ்தீக் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார். அவர் அதற்கு பூரண தயார்நிலையில் இல்லாமையால் மேலதிக விசாரணைக்காக வழக்கை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதிக்கு நீதிவான் சம்சுதீன் ஒத்திவைத்தார்.

ஹென்றி மகேந்திரன்சார்பில் பிரபல சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவின் வழிநடத்தலில் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிவரஞ்சித், சட்டத்தரணி என். மதிவதனன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர். இந்நிலையில் 35ஆவது தவணையின்போது எதிர்பாராத திருப்பம் ஏற்படலாமெனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




எழிலன் உட்பட காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான

## வழக்கின் தீர்ப்பு தவணையிடப்பட்டது

■ க. அகரன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட இறுதிக்கட்ட போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல்போனவர்களை முன்னிலைப்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு, அடுத்த வருடத்துக்கு தவணையிடப்பட்டு உள்ளதாக, சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்தார்.

இது தொடர்பில் தெரிவித்த அவர், இந்த வழக்கு தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று, அந்த நீதிமன்றம் ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கை மீதான வவுனியா மேல் நீதிமன்றின் தீர்ப்பு, நேற்று வழங்கப்படுவதாக இருந்தது. எனினும், அந்தத் தீர்ப்பு இன்னும் தயாரித்து முடிக்கப்படவில்லை என்று வவுனியா மேல் நீதிமன்றம், அறிவித்துள்ளது என்று தெரிவித்தார்.

## டக்ளஸின் விளக்கத்துக்கு சிரித்த சீன தூதுவர்

■ எஸ். நிதர்ஷன், எம். றொசாந்த்

வடக்குக்கு, இரண்டு நாள்கள் விஜயம் மேற்கொண்டுள்ள சீன தூதுவர், யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்கும் விஜயத்தை மேற்கொண்டு வரும் நிலையில், நேற்று (16) காலை 8 மணியளவில், அரியாலை, கடலட்டை பண்ணைக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது, அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்திருந்தார்.

அத்தருணத்தில், கடலட்டை பண்ணையில் ஒரு சுவாரஸ்யமான சம்பவமொன்று பதிவானது.

அங்கு இருந்த பனை மரத்தைக் காண்பித்து, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதுதான் "பல்மேறா" எனத் தெரிவித்தார்.



இதன்போது சீன தூதுவர், பனை மரம் தொடர்பில் வினவினார்.

"இதில் றொடி(கள்) கிடைக்கும். அற்ககோல்" என சைகை மூலம் காண்பித்து, "இது உடம்புக்கு கேடு விளைவிக்காது" என விளங்கபடுத்தினார்.

அதற்கு தூதுவர் ஹா... ஹா.. என வாய்விட்டு சிரித்தார். அங்கிருந்தவர்களும் சிரித்துக்கொண்டனர்.

## எரிவாயு அடுப்பு வெடித்தது

■ ஏ.எம் கீத்

திருகோணமலை, நகரில் விஹாரை வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று (16) மதியம் சமைக்கும் போது எரிவாயு அடுப்பு சிதறி தீப்பற்றியது

இதனால், சமையலில் ஈடுபட்டிருந்த குறித்த வீட்டின் பெண்மணி எரிவாயு சிலிண்டர், அடுப்பின் வாயு இணைப்பை உடனடியாக அகற்றி எரியும் வாயு அடுப்பின் மீது தண்ணீர் விசிறி, தீயை அணைத்துள்ளார்

அதையடுத்து, திருகோணமலை தலைமைப் பொலிஸாருக்கு விடயம் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து குறித்த வீட்டிற்கு விரைந்த தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர். எனினும், காயங்களோ உயிர்சேதமோ ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



### இரு மாவட்டங்களின் எல்லையில்

# சிக்கித் தவிக்கும் புதுக்காட்டு மக்கள்

**மொஹொமட் ஆஸிக்**





கண்டி மற்றும் மாத்தளை மாவட்ட எல்லையில் வசிப்பதன் காரணமாக தாம் பாரிய கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளதாக கண்டி, வத்துகாமம், புதுக்காட்டுத் தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

கண்டி மாவட்டத்தில் பாத்ததும்பறை தேர்தல் தொகுதியும் மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டை தேர்தல் தொகுதியும் பிரியும் எல்லையில் புதுக்காட்டுத் தோட்டம் அமைந்துள்ளது.

கண்டி, வத்துகாமம் நகருக்கு சுமார் 13 கிலோ மீற்றர்களும், மாத்தளை வீதிக்கு சுமார் எட்டு கிலோ மீற்றர்களும் இத்தோட்டத்தில் இருந்து செல்ல வேண்டியுள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தோட்டதிலுள்ள பாதை குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். பஸ் தோட்டத்துக்கு வராததன் காரணமாக, பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்வது 75 சதவீதத்தால் குறைந்துள்ளது.

கண்டி, மாத்தளை மாவட்டங்களுக்கு இடையில் சிக்கி, நாங்கள் தவித்துக் கொண்டிருக்கின்றோம். எங்கள் பதிவுகள் வாக்குகள் அனைத்தும் கண்டி மாவட்டத்தில் பாத்தும்பறை தேர்தல் தொகுதியிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் பாதையின் பெரும்பாலான பகுதி, மாத்தளை மாவட்டத்துக்குச் சொந்தமாக உள்ளதால், யாரும் இதைச் செப்பனிடுவதில்லை என்றும் எல்லை பிரச்சினையின் காரணத்தை முன்வைக்காமல், தோட்டத்துக்கு வரும் பாதையை உடன் சரிசெய்து தருமாறும் கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்தனர்.

எனவே, வெகு விரைவில் இப்பாதையைச் செப்பனிட்டு, பஸ் சேவையை மீண்டும் தோட்டத்திற்கு ஏற்படுத்தித் தருவதற்கு வசதிசெய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதாகவும் இத்தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

## ஜனன தின விழா

தலவாக்கலை, ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 96 ஆவது ஜனன தின விழா கலை, கலாசார ஆன்மீக நிகழ்வுகளுடன், ஸ்ரீ சத்ய சாயி வித்யா நிலையம் சர்வதேச பாடசாலையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில், கொட்டக்கலை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சாவித்ரி ரவிவர்மா, தலவாக்கலை ஸ்ரீ சத்ய சாயி வித்யா நிலைய பணிப்பாளர் வைத்தியர் கருணைராசன், ஸ்ரீ சத்ய சாயி வித்யா நிலைய பாடசாலையின் அதிபர் உமாதர்சினி ஆகியோர் கலந்துகொண்டனர். (பி. கேதீஸ்)









### வீதியில் நின்ற வானை

## முட்டித் தள்ளிய கார்

**ரஞ்சித் ராஜபக்ஸ**

கொட்டாவையிலிருந்து நுவரெலியா வரை பயணித்த காரொன்று பிரதான வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றுடன் மோதியதால், குறித்த வான் 30அடி பள்ளத்தில் அமைந்துள்ள வீடொன்றுக்கு அருகில் விழுந்துள்ளது.

நேற்று முன்தினம் (15) மாலை 4.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதுடன், லிந்துலை, பாமஸ்டன் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காரைச் செலுத்திய சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கமே இந்த விபத்துக்குக் காரணம் என லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் பள்ளத்தில் விழுந்த வானில் எவரும் இல்லாமையால் பாரிய அசம்பாவிதம் ஒன்று தவிர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இந்த விபத்தில் காரில் பயணித்த மூவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத போதிலும் இரண்டு வாகனங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.





### அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கு எதிராக

## நாகசேனையில் ஆர்ப்பாட்டம்

**கே.சுந்தரலிங்கம்**

அக்கரபத்தனை பிரதேச சபை தவிசாளர், பஸ்தரிப்பு நிலையம் நிர்மாணிப்பதாக கூறி, அதற்கு மேல் கடைகள் நிர்மாணித்து தங்களுடைய ஆதரவாளர்களுக்கு கொடுப்பதற்கு முயற்சிப்பதாக எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (16) நாகசேனை பகுதியில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், அக்கரபத்தனை பிரதேச சபையில் நிர்மாணிக்கப்படவிருந்த பஸ்தரிப்பு நிலையத்திற்கு எந்தவித அனுமதியும் பெறப்படவில்லை.

வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமும் அனுமதி பெறவில்லை. தோட்ட நிர்வாகத்திடமும் அனுமதி பெறவில்லை. இவர்கள் தங்களது ஆதரவாளர்களுக்கு கடைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக மாத்திரமே இந்தப் பஸ்தரிப்பு நிலையம் என்ற போர்வையில் பணிகளை முன்னெடுக்கின்றனர். எனவே, நாங்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம் எனத் தெரிவித்தனர்.

### பதுளையில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த

## புதிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

**எம். செல்வராஜா**

> சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் குறித்து முறைப்பாடுகளைத் தெரிவிக்க 055-3134223, 055-3134224 ஆகிய அவசர இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன

பதுளை மாவட்டத்தில் மிக வேகமாகப் பரவி வரும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில், பொது மக்களின் பூரண ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு அவசர இரு தொலைபேசி இலக்கங்களை பொதுமக்களுக்கு வழங்கியுள்ளோமென்று, பதுளை மாவட்ட இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ஈ.எம்.எல். உதயகுமார தெரிவித்தார்.

நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், கொரோனா தடுப்புச் செயலணிக் கூட்டத்தின் போது, கொரோனா- 19 தொற்றைக் கட்டுப்படுத்த பொது மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து பேசப்பட்டது. இதன்போது சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் குறித்து முறைப்பாடுகளைத் தெரிவிக்க 055-3134223, 055-3134224 ஆகிய அவசர இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த இலக்கங்களுக்கு முறைப்பாடு செய்பவர்களின் பெயர், விவரங்கள் இரகசியமாக வைக்கப்படும். நாட்டின் நலம், சமூக நலன் குறித்த இச் செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றார்.

பொது இடங்கள், கடைகள், தனியார் இடங்கள், அரச மற்றும் தனியார் அலுவலகங்கள், வேலைத்தளங்கள், பாடசாலைகள், பெருந்தோட்டங்கள் போன்ற இடங்களில் சுகாதார வழிமுறைகளை மீறுவோர் தொடர்பாக முறைப்பாடு செய்யலாம் என்றும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றவுடன், சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்றும் பதுளை மாவட்ட இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ஈ.எம்.எல். உதயகுமார தெரிவித்தார்.

### கொரோனா தொற்றால்

## பொகவந்தலாவையில் தனியார் வங்கிக்குப் பூட்டு

**எம். கிருஸ்ணா, ரஞ்சித் ராஜபக்ஸ**

பொகவந்தலாவை நகரிலுள்ள தனியார் வங்கியொன்றின் பணியாளர்கள் ஐவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து, குறித்த வங்கியை நேற்று முன்தினம் (15) முதல் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, குறித்த வங்கியின் முகாமையாளர் உள்ளிட்ட பணியாளர்கள், ஆறு பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர் என, பொகவந்தலாவை சுகாதார அதிகாரிகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வங்கியின் பணியாளர்கள் சிலருக்கு தொற்றின் அறிகுறிகள் காணப்பட்ட நிலையில், முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போதே, ஐவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

### பொஸ்கோ பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை

## நிவர்த்திக்குமாறு கோரி பெற்றோர் பேரணி

**ரஞ்சித் ராஜபக்ஸ**



ஹட்டன், பொஸ்கோ பாடசாலையில் பல வருடங்களாகக் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிவர்த்தி செய்யுமாறு தெரிவித்து, குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்று முன்தினம் (15) பாடசாலைக்கு அருகில் பேரணியை ஆரம்பித்த பெற்றோர், ஹட்டன் கல்வி வலயம் வரை சென்று, கல்வி வலயப் பணிப்பாளரிடம் மனுவொன்றைக் கையளித்ததுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

குறித்த பாடசாலையின் சிங்கள பிரிவில் 1 தொடக்கம் 11ஆம் தரம் வரை 123 மாணவர்கள் கற்கும் நிலையில், அந்த மாணவர்களுக்கு கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் போதியளவு இல்லை என்றும் இதனால் குறித்த பாடங்களில் தமது பிள்ளைகளின் நிலை மிகவும் மோசமாக உள்ளதென்றும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

மேலும், இதுவரை தமது பிள்ளைகளுக்கு கற்பித்த பல ஆசிரியர்கள், பாடசாலைகள் மூடப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர் என்றும் ஆனால் இவ்வாறு ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு இதுவரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்றும் குற்றஞ்சுமத்துகின்றனர்.

இந்த நிலையில், ஹட்டன் கல்வி வலய உதவிப் பணிப்பாளருக்கும் பெற்றோருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் 21ஆம் திகதி ஆசிரியர் இடமாற்ற சபை கலந்துரையாடல் இடம்பெறும்போது, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாகவும் உதவிப் பணிப்பாளர் உறுதியளித்துள்ளார்.

### மஸ்கெலியா பிரதேச சபையின் செயற்பாடுகளைக் கண்டித்து

## எதிர்கட்சியினரால் ஆர்ப்பாட்டம்



**எஸ். சதீஸ்**

மஸ்கெலியா பிரதேச சபையில் இடம்பெறும் மோசடிகள், வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மஸ்கெலியா பிரதேச சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நேற்று (16) முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச சபையின் எதிர்கட்சி உறுப்பினர்களால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், பிரதேச சபையின் அனுமதியின்றி சட்டவிரோத கட்டடங்கள் அமைக்கப்படுவதாகவும் அதற்கு மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் துணைப்போவதால் வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தினர்.

'தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்கு; வன்முறைகளை நிறுத்து; மோசடிகளை நிறுத்து' போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# ஒரு நொடியேனும் அசட்டையாக இருந்து விடாதீர்கள்

தொனிப்பொருள் மாற்றிக்கொண்டே இருப்பதை, எவராலும் தடுத்து நிறுத்தமுடியாது. ஆனால், சிலவற்றை ஞாபகத்தில் வைத்திருப்பதே பெரிய தலையிடியாய் அமைந்துவிடும். ஆகையால் பழையவற்றை மறந்துவிடுவதே மேல். ஆனால், ஒருசிலவற்றை எக்காரணம் கொண்டும் மறந்தே விடக்கூடாது. இது, சகலரும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டிய விடயமாகும். அத்துடன், ஒவ்வொரு நிமிடமும் அவற்றை முறையாகக் கடைப்பிடிக்கவே வேண்டும். அவைதான் சுகாதார வழிகாட்டல்கள்!

நாங்கள் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றோம்; தடுப்பூசிகளையும் செலுத்திக்கொண்டுவிட்டோமென வீராப்புடன் இருந்துவிடக்கூடாது.

தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டாலும் சிலருக்கு கொரோனா தொற்றியிருக்கின்றது. அதேபோல, புதிய பிறழ்வான ஒமிக்ரானும், ஓரளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. நாடு முழுமையாகத் திறந்துவிடப்பட்டமையால், கொரோனா மீதான அச்சம் பலரிடத்திலும் இல்லையென்றே கூறவேண்டும்.

சுகாதார அமைச்சால் விடுக்கப்பட்டிருக்கும் சுகாதார வழிகாட்டல்களை மிகக்கவனமாக, மிகச்சரியாகக் கடைப்பிடிக்கவேண்டும். இல்லையேல், ‘கொரோனா சுனாமி’ ஏற்பட்டுவிடுமென எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதத்திலும் ஏதாவது ஒரு பெருநாள் இருக்கும். டிசெம்பர் மாத நிறைவில் கிறிஸ்மஸ், புத்தாண்டு ஆகியவற்றை வரவேற்கவேண்டியிருக்கிறது. அதனால், புத்தாடைகள், வீட்டுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக குடும்பம், குடும்பமாக நகரங்களுக்குப் படையெடுப்பர்.

பெருநாள், பண்டிகைகளைக் கொண்டாடி மகிழவேண்டுமென்பதில் மாற்றுக்கருத்தில்லை. இரண்டொரு வருடங்களாக, எந்தவொரு பெருநாளையும் வீட்டுக்கு வெளியே சென்று கொண்டாட முடியாத நிலையில் இருந்தோம்.

வருமானங்கள் இன்றி இருந்த வர்த்தக நிலையங்களில் ஓரளவுக்கு வியாபாரம் நடைபெறுகின்றது. என்றாலும், நுகர்வோரை கூட்டமாக நிலையங்களுக்குள் உள்ளெடுத்து, சமூக இடைவெளிக்குக் குந்தகம் விளைவித்துவிடக்கூடாது. இதனை, பொதுப் போக்குவரத்திலும் கடைப்பிடிக்க வேண்டும்.

கொரோனா தொற்றிலிருந்து தற்பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை கடைப்பிடிப்பது மட்டும் போதுமானதாக இல்லை. கூடுமான வரையில், சனக் கூட்டமான இடங்களுக்குச் செல்லாமல் இருப்தே உத்தமமானது. ஆகையால், கிறிஸ்மஸ், புத்தாண்டு போன்ற பண்டிகைகளுக்கான பொருட்கொள்வனவு மற்றும் விடுமுறையைக் கழிப்பதற்காக சுற்றுலாச் செல்லல் உட்பட, சகல இடங்களிலும் சுகாதார வழிகாட்டல்களை அச்சொட்டாகக் கடைப்பிடிக்கவேண்டும்.

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை, அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கொரோனா மரணங்களின் எண்ணிக்கையும் குறையவில்லை. இதேவேளை, முதலிரண்டு தடுப்பூசிகளைக் கூட, செலுத்திக் கொள்ளாதவர்கள் இன்னுமிருக்கின்றனர் என சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தடுப்பூசிகளை செலுத்தும் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. ஆகையால், தடுப்பூசிகளை தாமதிக்காது செலுத்திக்கொள்ளவேண்டும். அதனூடாக, கொரோனா தொற்றிக்கொள்வதில் இருந்தும் ஏனையோருக்கு தொற்றிவிடாமலும் பாதுகாத்துக்கொள்ளலாம். ஏற்கெனவே வலியுறுத்தியதைப் போல, சுகாதார வழிகாட்டல்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டுமென மீண்டும், மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சந்தேகப்பட்டே தீரவேண்டும் என்பதுபோல், எல்லாவற்றையும் தவறான கோணத்தில் நோக்கி, ஐயப்பட்டே வாழ்பவர்கள் இருக்கின்றார்கள். இத்தகையவர்கள் குடும்பத்திலும் நண்பர்கள், உறவினர்கள் மத்தியில், சுமூக உறவைப் பேணமாட்டார்கள். மற்றையவர்களைப் புரிந்தகொள்ளவும் முயற்சிக்கமாட்டார்கள்.

இது ஒரு மனோ விகாரம் போலிருக்கும். சிலருடன் பேசிப்பார்த்தால், இத்தகையவர்களை நீங்களும் சந்தித்திருக்கலாம். இவர்களின் இல்லற வாழ்க்கை கூடப் பிரச்சினைக்குரியது. சந்தேகப்பட வேண்டிய விடயங்களில் சந்தேகப்படலாம்.

தேவையற்ற விடயங்களில் ஐயுறவு கொள்பவர்கள், முக்கியமான விடயங்களில் கோட்டைவிட்டுவிட்டு, பின்தங்கிவிடுவார்கள். கடைக்குச் சென்றால், எல்லாப் பொருட்களையும் ஆராய்வார்கள். இவர்களின் செயலைப் பார்த்து, கடையில் இருக்கும் ஊழியர்கள் பொறுமை இழந்துவிடுவார்கள். இறுதியில், இவர்கள் எதையும் வாங்காது திரும்பிவிடுவதுண்டு.

சந்தோசமான வாழ்க்கையைத் தேவையற்ற விதத்தில் துன்புறுத்தி, வீணாகவே பிறர் மனதைப் புண்ணாக்க மனவிகாரம் காரணமாகின்றது. தொழில் செய்யும் அலுவலகத்தில் ஊழியர்களைக் கலவரத்தில் ஆழ்த்தும் சந்தேகப்பேர்வழிகள் தங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். அமைதி, நிம்மதியை அனுபவிப்பவர்கள், சலனப்படுவதில்லை.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### புதிய பாலத்தை நிர்மாணிக்கவும்

பதுளை - பசறை பிரதான வீதியில் இரண்டாம் கட்டையில் இருந்து தெளிபெத்த, கெந்தகொல்ல ஆகிய பிரதேசங்களுக்குச் செல்லும் பிரதான வீதியின் முதலாவது மைல் கல்லுக்கு அருகில், புதிதாக அமைக்கப்பட்ட பாலம் தாழிறங்கிக் காணப்படுகின்றது. இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டு ஏறத்தாள ஒரு வருடம் கூட நிறைவு பெறுவதற்கு முன்னரேயே, பாலம் இவ்வாறு தாழிறங்கி உள்ளமை குறித்து, இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாலத்தின் நிர்மாணத்தின் போது தரமில்லாத பொருட்கள் பயன்படுத்தப்பட்டமையும், முறையாக நிர்மாணிக்கப்படாமை ஆகிய காரணங்களாலேயே, பாலம் இவ்வாறு தாழிறங்குவதாகவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்நிலையில், தற்போது போக்குவரத்துக்காகப் பழைய பாலமே பயன்படுத்தப்படுகின்றது. பழைய பாலம் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதுடன் விபத்துகள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களும் அதிகளவில் காணப்படுகின்றன.

எனவே, சம்பந்தப்பட்டட அதிகாரிகள் இதுதொடர்பாக அக்கறை எடுத்து, பாதுகாப்பான பாலத்தை நிர்மாணித்துத் தரவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

தி. நந்தகமார்

2022க்கான முன்னோட்டம் – 03:

# ஜனநாயகத்தின் எதிர்காலம் என்ன?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

காலத்தோடு கருத்துகளும் கருதுகோள்களும் களங்களும் மாறுவது இயற்கை. கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக, அரசியல் செல்நெறியில் செல்வாக்குச் செலுத்திய ஒரு கருத்துருவாக்கமாக ஜனநாயகம் இருந்து வந்துள்ளது. இன்றும் பொதுப்புத்தி மனநிலையில், ஜனநாயகம் என்பது அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

அதேவேளை, உரிமை மறுப்புகளும் சுதந்திரப் பறிப்புகளும் ஜனநாயகத்தின் பெயராலேயே அரங்கேறி வந்துள்ளன. ஜனநாயகத்தின் வரைவிலக்கணத்தின் படி, இலங்கையில் நடப்பது ஜனநாயக ஆட்சி. இதே வகைப்பட்ட சவால்களை, உலகின் பல நாடுகள் எதிர்நோக்கியுள்ளன. இவையனைத்தும் ஒரே கேள்வியையே முன்னிறுத்துகின்றன. ஜனநாயகத்தின் எதிர்காலம் என்ன?

கடந்த ஒரு தசாப்த காலமாக, ஜனநாயகம் என்ற எண்ணக்கரு இரண்டு வகைப்பட்ட மாற்றங்களுக்கு உள்ளாகி வந்துள்ளது.

முதலாவது, ஜனநாயகம் என்ற எண்ணக்கருவை, 21ஆம் நூற்றாண்டில் எவ்வாறு விளங்கிக் கொள்வது என்பது முக்கிய பேசுபொருளாகியது. குறிப்பாக, உலகெங்கும் ஜனநாயகம் பல்வேறு விதமான பொருள்கோடல்களுக்கு உட்பட்டு வந்துள்ளது. அதற்கான காரணங்கள் பல.

ஜனநாயகம் என்பது, மேற்குலக நாடுகளின் பிரதான அரசியல் விழுமியமாக மதிக்கப்பட்டு வருகிற நிலையில், எந்த ஓர் அரசாட்சியையும் ஆட்சி முறையையும் அதன் செயல்களையும் ஜனநாயகத்தோடு பொருத்திப் பார்ப்பது அல்லது அதை ஜனநாயகத்தோடு பொருள்கோடல் கொள்வது அவசியமாகிறது. அதன்மூலமே, அரசாங்கங்கள் தமக்குத் தேவையான அங்கிகாரத்தையும் ஜனநாயகத்தின் பெயரிலான அதிகாரத்தையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பைப் பெறவியலும். எனவே அரசாங்கங்களின் நடத்தைகளுக்கு, ஜனநாயகம் என்ற கவசம் தேவைப்படுகிறது. இதற்கு ஏதுவாக பல்வேறு பொருள்கோடல்களுக்கு ஜனநாயகம் உட்பட்டு வந்துள்ளது.

இரண்டாவது, மேற்குலக நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில், மேற்குலகு முன்வைக்கும் ஜனநாயகம் என்ற வரையறைக்கு மாற்றாக, வேறு வழிமுறைகளில் அமைந்த ஆட்சிமுறைகள் முன்மொழியப்பட்டு செயல்வடிவம் பெற்றுள்ளன. அவையும் ஜனநாயகம் என்ற எண்ணக்கருவையே அடிப்படையாகக் கொண்டவை. இவற்றில் பல, மக்கள் நலநோக்கில் அமைந்தவையாக இருக்கின்றமையையும் காணக்கூடியதாக உள்ளது. வெற்றிகரமான மாற்றுகள், கடந்த இரு தசாப்தங்களில் பல நாடுகளில் பரிசோதனைக்கு உள்ளாகியுள்ளன. எனவே இவையும் கருத்தில் கொள்ளத் தக்கவை.

இந்த இரண்டின் அடிப்படையிலேயே, ஜனநாயகத்தின் எதிர்காலம் குறித்து நோக்க வேண்டியுள்ளது. ஜனநாயகம் என்பதை, குறிப்பாக சோசலிச முகாமின் பின்னடைவோடு, தாராளவாத ஜனநாயகமாக முன்னெடுத்த கடந்த மூன்று தசாப்தங்களில், உலகில் அதிகரித்து வரும் சமத்துவமின்மையும் அதிகாரத் துஷ்பிரயோகமும், ஜனநாயகம் குறித்த புதிய கேள்விகளை எழுப்பியுள்ளன.

2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட உலக பொருளாதார நெருக்கடி, ஜனநாயகத்தின் மீதான மிகப் பெரிய நெருக்கடியாக உருவெடுத்தது. அதைத் தொடர்ந்த ஒரு தசாப்த காலத்தில், தாராண்மைவாத ஜனநாயகத்தின் காவலனாகத் தன்னை நிலைநிறுத்தி வந்த அமெரிக்காவில் ஏற்பட்ட உள்ளார்ந்த நெருக்கடிகள், அமெரிக்காவுக்க உள்ளேயே ஜனநாயகம் குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளன.

மறுபுறம், உலகின் தவிர்க்கவியலாத சக்தியாக சீனா தன்னை முன்னிறுத்தியுள்ளது. ஜனநாயகம் குறித்த சீனாவின் வரையறைகள் தாராண்மைவாத முதலாளித்துவ ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டவையல்ல. அதேவேளை, முழுமையான சோசலிச ஜனநாயகப் பண்புகளைக் கொண்டவையுமல்ல. இரண்டும் கலந்த கலவையான ஒரு ஜனநாயக மாதிரியை சீனா முன்மொழிகிறது.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக, தாராண்மைவாத ஜனநாயகத்தின் காவலனாகத் தங்களை வரித்துக்கொண்ட ஐரோப்பிய நாடுகளில், தேசியவாதமும் நிறவெறியும் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றன. அதிதீவிர வலதுசாரி அலையொன்று அங்கு மேலெழுகிறது. அது தாராண்மைவாத ஜனநாயகத்தையோ அதன் உற்பவிப்பான மனித உரிமைகளையோ ஏற்பதில்லை.

இன்று பல ஐரோப்பிய நாடுகளில் குடியேற்றவாசிகளுக்கு எதிரான சட்டங்களும் நடைமுறைகளும் மனிதவுரிமை மீறல்களும் சாத்தியமாகியுள்ளன. இப்பின்புலத்தில் இவ்வரசுகள் தாரண்மைவாத ஜனநாயகத்தை அதன் முழுமையாக உட்பொருளுடன் ஏற்றுக் கொள்ளவியலாத நிலையில் உள்ளன.

கடந்த வாரம், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், உலக நாடுகளில் குறிப்பிட்டவற்றை அழைத்து, ‘ஜனநாயக மாநாடு’ நடத்தியிருந்தார். உலகின் ஒவ்வொரு பிரதேசங்களிலும் இருந்து, சில நாடுகள் அழைக்கப்பட்டன; இன்னும் சில நாடுகள் தவிர்க்கப்பட்டன. இந்தத் தெரிவுக்கான வரையறை, அமெரிக்க நலனாக இருந்தது. ஜனநாயகத்தை மீட்பதற்கும் ஜனநாயக நாடுகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை இணைந்து எதிர்கொள்வதற்குமானதாகவே இம்மாநாடு நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஜனநாயகம் பற்றி அமெரிக்கா கவலைப்படுவது நகைப்புக்குரியது. கடந்த பல தசாப்தங்களாக, உலகெங்கும் பல ஜனநாயக ஆட்சிகளைத் தூக்கியெறிந்த பெருமைக்குரியது அமெரிக்கா. 1950களில் இருந்து தொடங்கினால், 1953ஆம் ஆண்டு ஈரானில் இடம்பெற்ற முஹமட் மொசாடெக் ஆட்சியைத் தூக்கியெறிந்து, மன்னர் ஷாவின் ஆட்சியைக் கொண்டுவந்தது. 1954 இல் ஜேக்கப் ஆர்பென்ஸைத் தூக்கியெறிந்து, குவாட்டமாலாவில் இராணுவ சர்வாதிகாரத்தைக் கொண்டுவந்தது. இதேபோல 1961இல் கொங்கோவில் லுமும்பா, 1964இல் பிரேஸிலில் குலார், 1964இல் கானாவில் என்குருமா, 1973இல் சிலியில் அயென்டே எனச் சொல்லிக் கொண்டே போகலாம்.

கொரோனா பெருந்தொற்றின் விளைவால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று ஆபிரிக்கா. மொத்த ஆபிரிக்கக் கண்டத்தில் எட்டு சதவீதமானவர்களுக்கே இரண்டு தடுப்பூசிகளும் போடப்பட்டுள்ளன. இதில் பெரும்பான்மையானவை சீனாவால் நன்கொடையாக வழங்கப்பட்டவை. மேற்குலக நாடுகளில் பயன்படுத்தப்படும் தடுப்பூசிகள், இந்நாடுகளுக்கு இன்னமும் எட்டாக்கனியாகவே உள்ளன.

தடுப்பூசிகளிலேயே ஜனநாயகத்தன்மை இல்லாத உலகில், ஜனநாயகம் பற்றிப் பேசுவதற்கு என்ன இருக்கிறது? ஆபிரிக்காவில் இப்பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள சமூகப் பொருளாதாரத் தாக்கம் மிகப்பெரிது. இந்நிலையில், 54 ஆபிரிக்க நாடுகளில் 17 நாடுகள் மட்டுமே இம்மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளன. அழைக்கப்பட்ட நாடுகளில் புக்கீனா பாசோ, நைகர், மாலி ஆகியவை ஆயுத மோதல்களாலும் தீவிரவாதத்தாலும் தொடர்ந்து சீரழிவன.

அழைக்கப்பட்ட ஓரளவு வளர்ச்சியடைந்த ஆபிரிக்க நாடான தென்னாபிரிக்கா, 2028ஆம் ஆண்டளவு குறைவான வருமானம் பெறும் நாடு என்ற நிலையை நோக்கிக் கீழிறங்கும் என அந்நாட்டின் பொருளாதாரக் குறிகாட்டிகள் கூறுகின்றன. இயற்கை வளங்களுக்காகத் தொடர்ச்சியாக சுரண்டப்படும் ஒரு கண்டத்தின் பொருளாதார நிலைமை மோசமாக இருக்கின்றது.

இதேவேளை, சட்டத்துக்குப் புறம்பாக ஆபிரிக்காவிலிருந்து ஆண்டொன்றுக்கு 90 பில்லியன் அமெரிக்கா டொலர்கள் வெளியேறுகின்றன. இவை, ஆபிரிக்க மக்களுக்கானவை. ஆனால், இயற்கை வளச் சுரண்டல் இதை ஒரு சிலருக்கானதாக ஆக்கியுள்ளது. ஆபிரிக்கா வறுமையில் உழல்கிறது. பொருளாதாரத்தைச் சீரமைக்காமல் ஜனநாயகம் பற்றிய பேச்சுகள் அர்த்தமற்றவை; ஆபிரிக்கா தரும் பாடமிது!

தென்னாசியாவைப் பொறுத்தவரை இலங்கையையும் பங்களாதேஷையும் தவிர்ந்த ஏனைய 5 நாடுகள் அழைக்கப்பட்டன. இந்தியா கடந்த சில ஆண்டுகளாக, ஜனநாயகக் குறிகாட்டிகளில் சுதந்திரமில்லாத நாடுகளில் ஒன்றாக மாறிய நிலையிலும் அழைக்கப்பட்டுள்ளது. அதேபோல, பிராந்தியத்திலேயே மோசமான மனித உரிமைக் குறிகாட்டிகளைக் கொண்ட பாகிஸ்தானும் மாலைதீவும் அழைக்கப்பட்டுள்ளன.

இவை காட்டி நிற்பது யாதெனில், நாடுகளின் தெரிவு ஜனநாயகம் சார்ந்ததல்ல. அமெரிக்காவின் மூலோபாய நலன்கள் சார்ந்தது. பாகிஸ்தான் இம்மாநாட்டில் பங்கேற்கவில்லை என அறிவித்தது. மேலும் ‘சரியான உரிய நேரத்தில் அமெரிக்காவுடன் ஜனநாயகம் குறித்துப் பேசுவோம்” என்றும் தெரிவித்துள்ளது. ஒரு வகையில், சீனாவுடனான உறவின் விளைவிலான முடிவு என இது விளங்கிக் கொள்ளப்பட்டாலும் அமெரிக்கா-பாகிஸ்தான் உறவில் ஏற்பட்டுள்ள விரிசலின் விளைவிலானது ஆகும்.

அதேபோல, தென்கிழக்காசிய நாடுகளில் கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து, சிங்கப்பூர், வியட்னாம் ஆகிய நாடுகள் அழைக்கப்படவில்லை. சீனாவுக்கு எதிராக ஆசியாவில், அமெரிக்காவின் உதவியோடு தனது செல்வாக்கைச் செலுத்த விரும்பும் ஜப்பானுக்கு இது நெருக்கடியைக் கொடுத்துள்ளது. தனது அதிருப்தியை ஜப்பான் வெளியிட்டுள்ளது. இவையனைத்தும் காட்டுவது யாதெனில், ஜனநாயகத்தின் பெயரால் நடப்பதென்னவோ ஆதிக்க அரசியல் தான் என்பதாகும். இந்தப் பகடையாட்டத்தை, அடுத்த வாரம் பார்க்கலாம்.

எமக்குச் சொல்லப்பட்டுள்ள ஜனநாயகம், மிகச்சரியாகச் சொல்வதாயின் தாராண்மைவாத ஜனநாயகம் - அதன் காவலர்களாலேயே வெட்டிக் கூறுபோடப்பட்டுள்ளது. ஆனால், மக்களுக்கான சமூகநீதியும் உரிமைகளும் சுதந்திரங்களும் இன்னமும் வெல்லப்பட வேண்டியவை. அதற்கான தொடர்ச்சியான நீண்ட போராட்டங்களும் தவிர்க்கவியலாதவை.

மக்கள் நல நோக்கில் ஜனநாயகம் குறித்த புரிதலொன்று உள்ளது. அது அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் உள்ளடக்கியது. அதை எக்காலத்திலும் மக்களிடமிருந்து பிரித்துவிட முடியாது.

புதுடெல்லி:

# பாலியல் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கியதில் தமிழகம் முதலிடம்

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில், பாலியல் தொழிலாளர்கள் அதிகமானோருக்கு நிவாரணப் பொருட்களை வழங்கியதில் தமிழக அரசு முதலிடம் வகிக்கிறது என்று உச்சநீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி, உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில், ‘அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் ஆகியவை, தங்கள் மாநிலத்தில் உள்ள பாலியல் தொழிலாளர்களுக்கு கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் இலவசமாக நிவாரணப் பொருட்களை வழங்க வேண்டும். அவர்களிடம் ரேஷன் கார்ட், அடையாள அட்டை கேட்கக்கூடாது. இது தொடர்பான, பயனாளிகள் பற்றிய அறிக்கையை மாநில அரசுகள் வழங்க வேண்டும்” என உத்தரவிட்டிருந்தது.

22 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இருந்து அறிக்கையைப் பெற்று, இதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர், உச்ச நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தார். அதில், தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பில் இரண்டு இலட்சத்து 89 ஆயிரத்து 400 பேர் பாலியல் தொழிலாளர்களாகப் பதிவு செய்துள்ளார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

அந்தப் பிரமாணப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழகத்தில் 85 ஆயிரத்து 504 பாலியல் தொழிலாளர்கள் உள்ளனர். இதில் 73,381 பேரிடம் ரேஷன் கார்ட் இருக்கிறது. கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் ரேஷன் பொருட்களைக் கூட்டுறவு சந்தைகள், கூட்டுறவு சூப்பர் மார்க்கெட், அம்மா மினி கூட்டுறவு, நடமாடும் பசுமை காய்கறிகள் திட்டம் ஆகியவை மூலம் அனைத்துப் பாலியல் தொழிலாளர்களுக்கும் இலவசமாகப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மத்தியப் பிரதேசத்தில் 40,312 பாலியல் தொழிலாளர்களும் உத்தர பிரதேநத்தில் 28,076 பாலியல் தொழிலாளர்களும் மகாராஷ்டிராவில் 25,594 பேரும், குஜராத்தில் 24,579 பேரும், கேரளாவில் 18 ஆயிரத்துக்கு மேற்பட்டோரும் உள்ளனர்.

குஜராத் அரசு தாக்கல் செய்த அறிக்கையில், மாநிலத்தில் 15,408 பாலியல் தொழிலாளர்களுக்கு ரேஷன் கார்ட்கள் இல்லாவிட்டாலும் அன்னம் பிரம்மா திட்டத்தின் கீழ் ரேஷன் பொருட்கள் வழங்கப்பட்டன. ஆனால், 12,291 பேர் இதை வாங்க விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளது.

மத்தியப் பிரதேசத்தல் 40,312 பாலியல் தொழிலாளர்களில் 3,657 பாலியல் தொழிலாளர்கள்தான் இந்த ஆண்டு டிசெம்பர் ஏழாம் திகதிவரை இலவச நிவாரணப் பொருட்களைப் பெற்றுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

மகாராஷ்டிர அரசின் அறிக்கையில், 25,594 பாலியல் தொழிலாளர்கள் தவிர்த்து அவர்களைச் சார்ந்திருக்கும் 6,731 குழந்தைகளுக்கும் இலவச நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. கொரோனா காலத்தில், பாலியல் தொழிலாளர்களுக்கு தலா ரூ.5 ஆயிரம் உதவித்தொகையும் குழந்தைகளுக்கு ரூ.2,500 உதவித்தொகையும் அரசு சார்பில் வழங்கப்பட்டது எனத் தெரிவித்துள்ளது.

உத்தரப் பிரதேசம், திரிபுராவில் மட்டும்தான் ஆண் பாலியல் தொழிலாளர்கள் உள்ளனர். மேகாலயா, உ.பியில் மூன்றாம் பாலினத்தவர், பாலியல் தொழிலாளர்களாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உ.பியில் 28,076 பதிவுசெய்யப்பட்ட பாலியல் தொழிலாளர்களில் 7,237 பேர் ஆண்கள். இவர்களில் 25,322 பாலியல் தொழிலாளர்களுக்கு இலவச நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. 1,752 பேர் பொருட்கள் வாங்க விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளது.

திரிபுராவில் 3,552 பெண், 281 ஆண் பாலியல் தொழிலாளர்களுக்கு 19 ஆயிரம் கிலோ கிராம் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. மேகாலயாவில் 200க்கும் மேற்பட்ட பாலியல் தொழிலாளர்கள் ரேஷன் கார்ட் வைத்துள்ளனனர் எனத் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் அதிகபட்சமாக அசாமில் 11,530 பாலியல் தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்க 19 மாவட்டங்களுக்கு ரூ.32.87 இலட்சம் ஒதுக்கப்பட்டதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இவ்வாறு, உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரமாண அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



புதுடெல்லி

## முப்படை தளபதிகள் குழுவின் தலைவராக இராணுவத் தளபதி நரவனே

முப்படை தலைமை தளபதியான பிபின் ராவத், டிசெம்பர் எட்டாம் திகதி இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்ததை அடுத்து, முப்படை தளபதிகள் குழுவின் தலைவராக இராணுவ தளபதி நரவனே பொறுப்பேற்றுள்ளார்.

முப்படை தலைமை தளபதி என்ற பதவி உருவாக்கப்படும் வரை, முப்படை தளபதிகளில் மூத்தவரே முப்படை தளபதிகள் குழுவின் தலைவராக செயற்பட்டுவந்தார். அப்பதவி உருவாக்கப்பட்ட பின்னர், முப்படை தலைமை தளபதியே முப்படை தளபதிகள் குழுவின் தலைவராக செயற்பட்டார்.

இந்நிலையில், தற்போதைய முப்படை தளபதிகளில் மூத்தவரான இராணுவ தளபதி நரவனே அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார். புதிய முப்படை தலைமை தளபதி நியமிக்கப்படும்வரை, நரவனே முப்படை தளபதிகள் குழு தலைவராக செயற்படவுள்ளார்.



புதுடில்லி:

## இனி பெண்ணுக்கும் திருமண வயது 21

ஆணுக்கு திருமண வயது 21 என்ற வரம்பு இருப்பது போல், பெண்ணுக்கும் திருமண வயது வரம்பு 21 ஆகிறது. இதற்கான ஒப்புதலை மத்திய அரசு வழங்கியது. பெண்ணுக்கு இனி 18 வயதில் திருமணம் செய்ய இயலாது.

1995 ஆண்டு இந்து திருமண சட்டத்தில் சில மாற்றங்களை செய்ய மோடி தலைமையிலான மத்திய அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. சிறப்பு திருமண சட்டம் , சிறுமிகள் திருமண தடுப்பு சட்டத்தில் மாற்றங்கள் வரவுள்ளன. இதன்படி, பெண்கள் திருமணம் 21 வயதாகும் போது அவர்களின் நலன் காக்கப்படும். பிறக்கும் குழந்தைகளுக்கும், சமூகத்திற்கும், மிக ஆரோக்கியமானதாக இருக்கும் என்றும் பரிந்துரையில் சில அம்சங்கள் எடுத்து காட்டப்பட்டுள்ன. பெண்கள் திருமண வயது 21 என்ற சட்டமூலத்துக்கு மத்திய அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பீஹார்

## ‘கால்வாய் மனிதர்’

பீஹார், கயா மாவட்ட பகுதியைச் சேர்ந்தவர் லாங்கி புய்யன். அருகில் உள்ள மலைப் பகுதிக்கு கால்நடைகளை மேய்க்க அழைத்துச் சென்று வந்த அவர், அங்கு பெய்யும் மழை நீர் வேறு பகுதிக்கு செல்வதை பார்த்தார்.அந்த மழை நீரைத் தன் கிராமத்துக்கு திரும்பும் வகையில், கால்வாய் அமைக்க முடிவு செய்தார்.

கடந்த, 30 ஆண்டுகளாக, தனியாளாக மலையில் இருந்து தன் கிராமத்துக்கு கால்வாயை அவர் அமைத்தார். கடந்தாண்டு இந்தப் பணியை அவர் முடித்தார். தற்போது அவருடைய கிராமத்துக்கு தேவையான தண்ணீர் கிடைத்து வருகிறது. இந்நிலையில், அருகில் உள்ள ஐந்து கிராமங்களுக்கும் தண்ணீர் கிடைக்கும் வகையில், மற்றொரு கால்வாயை அமைக்கும் பணியை அவர் தொடக்கியுள்ளார். “போதிய தண்ணீர் கிடைத்தால், அந்தக் கிராமங்களில் விவசாயம் செழிக்கும்; மக்களும் வறுமையில் இருந்து மீள்வர்” என, புய்யன் கூறியுள்ளார்.

கொல்கத்தா

## துர்க்கா பூஜைக்கு உலக பாரம்பரிய அந்தஸ்து



மேற்கு வங்கத்தில் ஆண்டுதோறும் துர்கா பூஜை வெகு விமரிசையாக் கொண்டாடப்பட்டுவரும் நிலையில், உலகப் புகழ்பெற்ற கொல்கத்தா துர்கா பூஜை கொண்டாட்டத்துக்கு உலகப் பாரம்பரிய அந்தஸ்தை யுனெஸ்கோ நேற்று முன்தினம் (15) வழங்கியுள்ளது.

துர்கா பூஜைக்கு உலகப் பாரம்பரிய அந்தஸ்து கிடைத்திருப்பது குறித்து பிரதமர் மோடி கருத்துத் தெரிவிக்கும்போது, “துர்கா பூஜை ஒரு பண்டிகையைவிட மேலானது; அது அனைவரையும் ஒன்றிணைக்கும் ஓர் உணர்வு. துர்கா பூஜை நமது பாரம்பரியங்கள் மற்றும் நெறிமுறைகளில் சிறந்தவற்றை எடுத்துக்காட்டுகிறது. கொல்கத்தாவின் துர்கா பூஜை ஒவ்வொருவரும் கட்டாயம் பெற வேண்டிய அனுபவம்” எனத் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லி:

## 2022இல் நிலவுக்கு மனிதனை அனுப்ப இந்தியா திட்டம்

அடுத்த ஆண்டு மனிதர்களை நிலவுக்கு அனுப்ப, இந்திய விண்வெளி ஆய்வுக் கழகமான, ‘இஸ்ரோ’ திட்டமிட்டுள்ளது. ‘ககன்யான்’ திட்டத்தின் கீழ், ‘இஸ்ரோ’ நிலவுக்கு மனிதர்களை அனுப்ப உள்ளது.

இது குறித்து மத்திய விண்வெளி துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங், லோக்சபாவில் கூறியதாவது: இருமுறை ஏற்பட்ட கொரோனா அலை காரணமாக, விண்கலத்துக்குத் தேவையான பொருட்கள் தயாரிப்பு பாதிக்கப்பட்டது. அதனால் ககன்யான் திட்டத்தின் கீழ், மனிதர்களை நிலவுக்கு அனுப்பும் திட்டம் தாமதமானது.

அடுத்த ஆண்டு இந்தியாவின், 75ஆவது சுதந்திர தின விழா பிரமாண்டமாக கொண்டாடப்பட உள்ளது. அதற்கு முன்னர், மனிதர்களை நிலவுக்கு அனுப்பும் திட்டத்தை செயற்படுத்த உள்ளோம்.

2016 - 21 வரையிலான ஐந்து ஆண்டுகளில், 27 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன. இது தவிர, இந்திய பல்கலைக்கழக மாணவர்களின், எட்டு செயற்கைக்கோள்கள் விண்ணில் ஏவப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

பந்தலூர்:

## காயத்துடன் சுற்றும் புலி; தேடும் பணியில் ‘கும்கி’



தமிழக - கேரள எல்லையில், பந்தலூாரில் கடந்த 10 நாள்களுக்கும் மேலாகச் சுற்றித்திரியும் புலி, 15க்கும் மேற்பட்ட கால்நடைகளை வேட்டையாடி உள்ளது.

வனத்துறையினர், பொலிஸார் இணைந்து ஐந்து இடங்களில் கூண்டு வைத்து, புலியைப் பிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். எனினும், புலி சிக்கவில்லை.

தற்போது, இரண்டு கும்கி யானைகள் உதவியுடன், புலியின் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது. வனத்துறையினர் வைத்திருந்த கண்காணிப்பு கமெராவில், கழுத்தில் பெரிய காயத்துடன் புலி நடந்து செல்வது பதிவாகி உள்ளது. வேட்டைக்கு வைக்கப்பட்ட சுருக்கில், புலி சிக்கியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

வட்டியில்லாத கடன் திட்டங்களில் மாணவர் பட்டப்படிப்புகளை வழங்கும்

# Saegis கம்பஸ்



பிராந்தியத்தில் பிரதான அறிவு மையமாக இலங்கையை மாற்றியமைக்கும் நோக்கில் இயங்கும் Saegis கம்பஸ், தமக்கு விருப்பமான பிரிவில் உயர் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருத்தமான உயர் கல்வியகமாக அமைந்திருப்பதுடன், இலங்கை அரசாங்கத்தால் அறிமுகம் செய்யப்பட்ட வட்டியில்லாத மாணவர் கடன் திட்டத்தின் (IFSL) கீழ் கல்வி அமைச்சால் அனுமதியளிக்கப்பட்ட பல்வேறு பட்டப்படிப்புகளை வழங்க முன்வந்துள்ளது.

2018, 2019, 2020 ஆகிய வருடங்களில் வெற்றிகரமாக தமது உயர் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு, பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றால் அங்கிகரிக்கப்பட்ட இந்தக் கற்கைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். அரச பல்கலைக்கழகங்களில் இணைந்து கொள்ள முடியாத மாணவர்களுக்கு இது சிறந்த மாற்றுத் தெரிவாகவும் அமைந்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பட்டப்படிப்புகளில் சந்தைப்படுத்தல், மனித வளங்கள் முகாமைத்துவம், கணக்கீடும் நிதியியலும் போன்றவற்றில் Bachelor of Business Management (Hons) மற்றும் கணினி விஞ்ஞானம், மென்பொருள் பொறியியல், தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றில் Bachelor of Science (BSc (Hons)) பட்டக் கற்கை மற்றும் Bachelor of Information Technology (BIT) ஆகியன வழங்கப்படுகின்றன. இந்தக் கற்கைகள் அனைத்தும் பாடவிதானத்தில் தொழிற்றுறைப் பயிற்சியையும் உள்ளடக்கியுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ், இந்தக் கற்கைகளைத் தொடர்வதற்கு, Saegis கம்பஸைச் சேர்ந்த ஆலோசகர்களால் மாணவர்களுக்கு அவசியமான வழிகாட்டல்கள், ஆதரவு போன்றன வழங்கப்படும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கல்வி அமைச்சின் இணையத்தளம் 2021 டிசெம்பர் 21ஆம் திகதி முதல் 2022 ஜனவரி 31 ஆம் திகதி வரை செயலில் இருக்கும்.

அதனைத் தொடர்ந்து கல்வி அமைச்சின் அதிகாரிகள் விண்ணப்பதாரிகளை 2022 பெப்ரவரி முதல் மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் நேர்காணலுக்கு உட்படுத்துவர். 2022 ஏப்ரல் மாதம் முதல் IFSL 6ஆம் உள்வாங்கல் கற்கைகளுக்கான கல்வியாண்டு ஆரம்பமாகும்.

பரந்தளவில் அறியப்படும் சகோதர கல்வியக குழுமமான சக்யா கல்விக் குழுமத்தின் வலிமை மற்றும் ஆதரவுடன், பண்டார திஸாநாயக்கவின் தூரநோக்குடைய தலைமைத்துவத்தின் கீழ் இயங்கும் Saegis கம்பஸ், தனது விரிவுரையாளர் குழுவில் சிறந்த கல்விமான்கள், நிபுணர்களைத் தன்வசம் கொண்டுள்ளது. இவர்கள் அனைவரும் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றுவதுடன், மாணவர்களுக்கு சிறந்த அறிவூட்டும் வகையில் தமது கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.

மாணவர்களுக்கு நவீன வசதிகளுடன் பரந்தளவு கல்வி பயிலும் சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், கம்பஸ் வளாகத்தில் இலவச WiFi வசதி, நவீன தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடம், மொழி ஆய்வுகூடம், நூலகம், ஓய்வெடுக்கும் பகுதி, அதிகளவு இடவசதிகளுடன் கூடிய வாயு குளிரூட்டல் வசதிகளுடனான விரிவுரை அறைகள், விளையாட்டு, பொழுது போக்கு செயற்பாடுகள், அதிகளவு இடவசதிகளுடனான உணவகம், லியோ கழகம், ரொடராக்ட் கழகம் போன்ற பல வசதிகள் காணப்படுகின்றன.

மாணவர்களுக்கு கல்விச் செயற்பாடுகளுக்கு அப்பால் இலவச ஆங்கில மொழியறிவு வகுப்புகள், பாதுகாப்பான தங்குமிட வசதிகள், இதர தங்குமிட வசதிகள், தொழிற் பயிற்சிகள், இடைக்கால பயிற்சி வாய்ப்புகள் மற்றும் பல்வேறு தனிநபர் ஆளுமை விருத்தி நிகழ்ச்சிகள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன.

LOKX பாதுகாப்பு சேவைகளுடன்

# உங்கள் பாதுகாப்பை திடப்படுத்துங்கள்



சுமதி ஹோல்டிங்ஸ் குழுமத்தின் துணை நிறுவனமான LOKX Security Services (Pvt) Ltd இனால் நாடு முழுவதையும் சேர்ந்த வணிக மற்றும் தொழிற்றுறைகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கும் வதிவிடங்கள் மற்றும் பணம் கொண்டு செல்கையில் அவசியமான பரிபூரண பாதுகாப்பு சேவைகள் வழங்கப்படுகின்றன.

பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப்பட்டு சான்றளிக்கப்பட்ட நிறுவனம் எனும் வகையில், 1987 ஆம் ஆண்டு, சுமதி ஹோல்டிங்ஸ் குழுமத்தின் பரந்த இலாகா பிரிவுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் Vice Squad Security Services ஆக LOKX Security Services நிறுவப்பட்டது. பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு உயர் தரம் வாய்ந்த சேவைகளை அதிகளவு அலுவலக இடவசதிகளுடன் பெற்றுக் கொடுக்கும் வகையில், அண்மையில் நிறுவனம் தனது செயற்பாடுகளை இல. 17, ஜயந்த வீரசேகர மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு மாற்றியமைத்திருந்தது. நகரின் மையப்பகுதியில் இந்தப் புதிய வளாகம் நிறுவப்பட்டுள்ளதுடன், இலகுவாக அணுகக்கூடியதாகவும் அவசியமான கண்காணிப்பு சேவைகளையும் வழங்குகின்றது.

வியாபாரங்களுக்கு தமது விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவும் வகையில் இந்த அமைவிடம் காணப்படுவதுடன், இதற்காக பெருமளவு ஊழியர்களையும் தன்வசம் கொண்டு, வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை பெற்றுக் கொடுக்கின்றது.

சுமதி ஹோல்டிங்ஸ் குழுமத்தின் வலுவூட்டலில், பரிபூரண பாதுகாப்பு தீர்வுகளை வழங்கி, பொது மக்களையும் வியாபாரங்களையும் பாதுகாக்கும் பணிகளை மேற்கொள்வதுடன், LOKX Security Services இனால் உடனுக்குடனான, மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய மற்றும் தங்கியிருக்கக்கூடிய பாதுகாப்பு தீர்வுகள் வழங்கப்படுவதுடன், பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு உயர் நியமத் தரம் மற்றும் நிபுணத்துவத்தை பேணும் வகையில் அமைந்துள்ளது. நன்மதிப்பு வாய்ந்த வகையிலும், நட்பான ரீதியிலும் சம்பந்தப்பட்ட நபர்களின் பிரத்தியேகத் தன்மையை பாதுகாத்து சேவைகள் வழங்கப்படுவதுடன், அதிகளவு உணர்திறன் பேணப்படுகின்றது. 1987 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது முதல், கடந்த தசாப்த காலங்களில் நிறுவனம் நேர்த்தியான மாற்றத்தை எதிர்கொண்டிருந்ததுடன், அதன் சேவைகளை வினைதிறன் வாய்ந்த வகையில் வழங்குகின்றது. 1,500 முறையாகப் பயிற்சிகளைப் பெற்ற பாதுகாப்பு நபர்களுடன் நிறுவனம் காணப்படுவதுடன், இதில் ஓய்வுபெற்ற மற்றும் முன்னாள் படை அதிகாரிகள் அடங்கியுள்ளனர். இவர்களின் நேர்மை, வெளிப்படைத்தன்மை, உண்மைத் தன்மை, நடத்தை போன்றவற்றை முறையாக ஆராய்ந்து பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். பாதுகாப்பை வழங்கும் வகையில் அணியில் அனுபவம் வாய்ந்த நபர்கள் பலர் காணப்படுவதுடன், தமது கடமைகளை வினைத்திறன் வாய்ந்த வகையில் முன்னெடுக்கின்றனர்.

பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுடன் நீண்ட கால, பரஸ்பர வெகுமதியளிக்கும் உறவுகளை கட்டியெழுப்புவதில் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், LOKX Security Services இனால், தங்கியிருக்கக்கூடிய மற்றும் நம்பிக்கை வாய்ந்த சேவைகள் பிரதான பெறுமதிகளாக வழங்கப்படுகின்றன. ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச விநியோகத்தர்களிடமிருந்து நவீன தொழில்நுட்ப வசதிகள் வழங்கப்படுவதுடன், அவசியமான டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட புத்தாக்கமான மற்றும் தங்கியிருக்கக்கூடிய வழிமுறைகள் வழங்கப்பட்டு, நாடு முழுவதிலும் சேவைகள் வழங்கப்படுகின்றன. இவற்றை மேற்கொள்ளும் பயிற்சிகளைப் பெற்ற பாதுகாப்பு அதிகாரிகள், நிறுவனத்தின் பெறுமதி வாய்ந்த சொத்துகளாக அமைந்துள்ளனர்.

அமெரிக்கா

ஒமிக்ரானுக்கு

# தனித் தடுப்பூசி தேவையில்லை

ஒமிக்ரான் தொற்றுக்கென தனியாக தடுப்பூசி கண்டுபிடிக்க தேவையில்லை என அமெரிக்க வெள்ளை மாளிகையின் தலைமை மருத்துவ ஆலோசகரான ஆண்டனி பவுசி, தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொரோனாப் பரவல் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் .

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "தற்போது மக்களுக்கு செலுத்தப்பட்டு வரும் தடுப்பூசிகளின் பூஸ்டர் டோஸ் ஒமிக்ரான் தொற்றை எதிர்த்து செயல்படும் ஆற்றல் கொண்டது.

எனவே, ஒமிக்ரான் தொற்றுக்கென்று தனியாக



தடுப்பூசி கண்டறிய தேவையில்லை" என்றார்.

மேலும், பைசர் தடுப்பூசியின் இரண்டு தவணைகளும் செலுத்திக் கொண்டால், ஒமிக்ரானை எதிர்த்து அது முழுமையாக செயல்படாவிட்டாலும், அதிக நோய் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



பிரேஸிலில்

அரசியல் வாதிகளின் வாக்குவாதம்

## குத்துச்சண்டையில் முடிந்தது

பிரேஸிலைச் சேர்ந்த இரு அரசியல்வாதிகளின் வாக்குவாதம் குத்துச்சண்டையில் முடிந்த சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரேஸின் அமேசோனாஸ் மாநிலத்தின் போர்பா நகரின் மேயரான சிமாவோ பெய்ஷோட்டோ என்பவருக்கும், அந்நகரின் முன்னாள் கவுன்சிலரான எரினியூ ஆல்வாஸ் டா சில்வா என்பவருக்கும் இடையில் தான், அதிக நாட்களாக மோதல் இருந்து வந்திருக்கிறது.

இந்நிலையில், அாண்மையில் சில்வா, மேயர் மீது அதிகமான புகார்களைத் தெரிவித்து வந்ததோடு மோசமான வார்த்தைகளால் அவரைத் திட்டியுள்ளார்.

மேலும் தன்னுடன் நேருக்கு நேராக சண்டையிட வருமாறு மேயரை அழைத்துள்ளார்.

இதற்கு சம்மதித்த மேயரும் "மோதலுக்கு நான் தயார், ஆனால் நான் வீதியில் சண்டை போடும் போக்கிரி கிடையாது, நான் மேயர் பொறுப்பில் உள்ளேன். சண்டை போட்டே ஆக வேண்டும் என்பது தான் அவரின் விருப்பம் என்றால், நான் தயார், நான் என்றைக்கும் தோல்வியைத்தான் பரிசாக கொடுத்திருக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இருவரும் குத்துச்சண்டைக் களத்தில் சண்டையிட்டுக்கொண்டனர். இவர்களது குத்துச்சண்டையைப் பார்க்க பொதுமக்களும், அவர்களது ஆதரவாளர்களும் அங்கு திரண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் போட்டியின் இறுதியில் மேயர் வெற்றி பெற்றதாக நடுவரால் அறிவிக்கப்பட்டார்.

சண்டை முடிந்த பின் வெற்றியடைந்த மேயர் பேசியதாவது, "நகர மக்களிடம் இது போன்ற விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்காக தான் இந்த சண்டை போட சம்மதித்தேன்" என்று தெரிவித்துள்ளார்.

தென்சூடான்

புதிதாகப் பரவும் மர்ம நோயால்

## 89 பேர் மரணம்

தென் சூடானில் பரவி வரும் அடையாளம் காணப்படாத மர்ம நோயால் இதுவரை 89 பேர் உயிரிழந்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.


ஜோங்லே மாகாணத்தில் உள்ள பங்காக்கில் நகரிலேயே இந் நோயால் பலர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து உலகச் சுகாதார ஸ்தாபனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் குறித்த பகுதியில் தீவிர ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

மேலும் நோய் பாதித்த பகுதியானது அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா



## சூரியனைத் தொட்ட நாசாவின் விண்கலம்

நாசா அனுப்பிய விண்கலமொன்று முதன் முதலாக சூரியனைத் தொட்டு இருப்பதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் சூரியனை ஆய்வு செய்ய அனுப்பி வைக்கப்பட்ட பார்க்கர் சோலார் பிரோப் என்ற விண்கலமே இதுவரை அறியப்படாத சூரியனின் கருவிழி வட்டம் என்று கருதப்படும் பகுதியில் சென்று வந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அறிவியல் துறைக்கு இது ஒரு முக்கியமான சாதனை என்று கருதப்படுகிறது.



தென் கொரியா

## பெண்களை பசுக்களாக சித்திரித்த விளம்பரத்தால் சர்ச்சை

பெண்களைப் பசுக்களாகச் சித்திரித்த விளம்பரமொன்று தென்கொரியாவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தென்கொரியாவில் 'சியோல் மில்க் ' என்ற பிரபல பால் உற்பத்தி நிறுவனமொன்று உள்ளது.

இந்நிறுவனம் அண்மையில் வெளியிட்ட விளம்பரத்தில் 'வயல்வெளியில் இருக்கும் பெண்களை ஒருவர் இரகசியமாகப் படம் பிடிப்பது போன்றும் பின்னர் அங்குள்ள பெண்கள் பசுக்களாக மாறுவது போன்று காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

இவ்விளம்பரம் சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதால் அந்நாட்டு மக்கள் குறித்த நிறுவனத்திற்கு எதிராக கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

குறிப்பாக பாலின வேறுபாடு மற்றும் உணர்வுபூர்வமான பிரச்சினைகள் குறித்து, இந்த விளம்பரம் தேசிய அளவிலான விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து குறித்த விளம்பரத்தை நீக்கியுள்ள அந்நிறுவனம் விளம்பரத்தை பார்த்து சங்கடம் அடைந்த அனைவரிடமும் மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்பதாகத் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் அவுஸ்திரேலியா



இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் முன்னிலையில் அவுஸ்திரேலியா காணப்படுகின்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இந்த ஆஷஸ் தொடரில், அடிலெய்ட்டில் நேற்று ஆரம்பமான இந்த டெஸ்டின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் பதில் அணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அவுஸ்திரேலியா சார்பாக கடந்த போட்டியில் விளையாடிய ஜொஷ் ஹேசில்வூட், அணித்தலைவர் பற் கமின்ஸை ஜஹை றிச்சர்ட்ஸன், மிஷெல் நேஸர் ஆகியோர் பிரதியிட்டனர். இங்கிலாந்து சார்பாக கடந்த போட்டியில் விளையாடிய மார்க் வூட், ஜேக் லீச்சை ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்டூவர்ட் ப்ரோட் ஆகியோர் பிரதியிட்டிருந்தனர். ந்

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஆரம்பத்திலேயே ப்ரோட்டிடம் மார்க்கஸ் ஹரிஸை இழந்திருந்தது. பின்னர் ஜோடி சேர்ந்த டேவிட் வோணர், மர்னுஸ் லபுஷைனின் இணைப்பில் இனிங்ஸை நகர்த்திய அவுஸ்திரேலியா, 95 ஓட்டங்களுடன் வோணரை பென் ஸ்டோக்ஸிடம் இழந்திருந்தது.

அந்தவகையில், நேற்றைய முதல் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 221 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் அவுஸ்திரேலியா பெற்றுள்ளது. களத்தில், லபுஷைன் 95, ஸ்மித் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர்.

துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில்

## இரண்டாமிடத்துக்கு முன்னேறிய லபுஷைன்



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு அவுஸ்திரேலியாவின் மர்னுஸ் லபுஷைன் முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் 74 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே, நான்காம் இடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தை லபுஷைன் அடைந்துள்ளார்.

இதேவேளை, குறித்த டெஸ்டில் 94 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் டேவிட் வோணர், ஒன்பதாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தை அடைந்துள்ளார்.

தவிர, இதே டெஸ்டில் 152 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் ட்ரெவிஸ் ஹெட், 26ஆம் இடத்திலிருந்து 16ஆம் இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜோ றூட், 2. மர்னுஸ் லபுஷைன், 3. ஸ்டீவ் ஸ்மித், 4. கேன் வில்லியம்ஸன், 5. றோஹித் ஷர்மா, 6. விராட் கோலி, டேவிட் வோணர், 8. திமுத் கருணாரத்ன, 9. பாபர் அஸாம், 10. குயின்டன் டி கொக், ட்ரெவிஸ் ஹெட்.



## அணித்தலைமையில் தொடருமாறு கோரவில்லை

இந்தியாவின் இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைமைப் பொறுப்பில் தொடருமாறு கோரவில்லை என இந்தியாவின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவர் விராத் கோலி தெரிவித்துள்ளார்.

இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைமையில் தொடருமாறு கோலியைக் கோரியதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் செளரஃப் கங்குலி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தென்னாபிரிக்க டெஸ்ட் போட்டிகளுக்கான இந்தியக் குழாமைத் தேர்வு செய்வதற்கான தெரிவுக் குழுச் சந்திப்புக்கு ஒன்றரை மணித்தியாலத்துக்கு முன்னரே ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைமைப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டது அறிவிக்கப்பட்டதாக கோலி மேலும் கூறியுள்ளார்.

தவிர, இந்தியாவின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான அணித்தலைவர் றோஹித் ஷர்மாவுக்கும் தனக்கும் எதுவிதப் பிரச்சினையுமில்லை என கோலி தெரிவித்துள்ளார்.

எல்.பி.எல்:

## ஸ்டார்ஸை வென்ற கிங்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற கொழும்பு ஸ்டார்ஸுடனான போட்டியில் ஜஃப்னா கிங்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற கிங்ஸின் அணித்தலைவர் திஸர பெரேரா, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ், டொம் கொஹ்லர்-கட்மோரேயின் 92 (55), உபுல் தரங்கவின் 37 (33), வனிடு ஹஸரங்கவின் ஆட்டமிழக்காத 19 (07), அஷான் றந்திகவின் 16 (09) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், நவீன்-உல்-ஹக் 4-0-27-3, ஜெஃப்ரி வன்டர்சே 4-0-33-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 194 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்டார்ஸ் சார்பாக டொம் பன்டன் மாத்திரமே 30 (33) ஓட்டங்களைப் பெற்றதுடன், ஏனையோர் குறிப்பிடத்தக்க ஓட்டங்களைப் பெறாத நிலையில் 15.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து



91 ஓட்டங்களையே பெற்று 102 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், ஜேடன் சியல்ஸ் 2.5-1-13-4, யாழ்ப்பாணத்தின் விஜயகாந்த் வியாஸ்காந்த் 4-0-32-3, மஹேஷ் தீக்ஷன 4-0-25-2, ஹஸரங்க 3-0-8-0, உஸ்மான் ஷின்வாரி 2-0-9-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இதில், பன்டன், குசல் பெரேரா, கீமோ போல் என அதிரடித் துடுப்பாட்டவீரர்களின் விக்கெட்டுகளை வியாஸ்காந்த் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் நாயகனாக டொம் கொஹ்லர்-கட்மோரே தெரிவானார்.

இந்நிலையில், இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கிங்ஸை கோல் கிளாடியேட்டர்ஸ் எதிர்கொள்ளவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கண்டி வொரியர்ஸை கொழும்பு ஸ்டார்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 17 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.